மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

Vol. 126 ஆகஸ்ட் *2026*

ரூத் - அடையாளம் மற்றும் நிஜநிறைவேறுதல்

E Vol 4, Ch. 6, pp.369-404

1. இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவங்களின் நிஜநிறைவேறுதலின் காலம் கி.பி *1844* முதல் கி.பி *1921* வரையுள்ள காலமாகும் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

சத்திய ஜனங்களை விட்டு
பெயர் சபைக்குச் சென்று,
ஒரு புது வகுப்பாருடன் தேவனுடைய
திட்டத்திற்குள் திரும்ப வருவது

1. ரூத் *1:1* நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான். இந்த பஞ்சமானது, *1844*-ம் வருடத்தில் நடந்த ஏமாற்றத்திற்குப் பிறகு, *1874* வரையுள்ள காலத்தில் தேவனுடைய ஜனங்களின் மத்தியில் உண்டான புது சத்தியத்தின் பஞ்சத்தை அடையாளப்படுத்துகிறது. பெத்லெகேம் (அப்பத்தின் வீடு - *house of bread*) என்பது, காலத்திற்கேற்ற வேதாகம சத்தியத்தின் செயல் எல்லையை அடையாளப்படுத்துகிறது. அந்த *30* வருடங்களில் *(1844-1874)* காலத்திற்கேற்ற சத்தியம் மிகவும் குறைவாகவே இருந்தது. பஞ்சத்தின் காலத்தில் பெத்லெகேமில் மிகக் குறைவான அப்பம் இருப்பதின் மூலம் இது அடையாளப்படுத்தப்படுகிறது.

2. ரூத் *1:2* அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப் தேசத்திற்குப் போய், அங்கே இருந்து விட்டார்கள். எலிமெலேக்கு (வல்லமையுள்ள ராஜா - *powerful king*) மில்லர் இயக்கத்தில் பங்குகொண்டு, *1844*-க்குப் பிறகு பெயர் சபைக்குத் (மோவாப் - தகப்பனிடமிருந்து வந்த - *from a father* - நிஜநிறைவேறுதலான லோத்தாகிய கிரீடத்தை இழந்த தலைவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பெயர் சபை) திரும்பிச் சென்ற கிரீடத்தை இழந்த தலைவர்களை அடையாளப்படுத்துகிறார். நகோமி (இன்பமான



pleasantness) தலைவர்களை பின்பற்றின கிரீடத்தை இழந்தவர்களை அடையாளப்படுத்துகிறாள். மக்லோன் *(நோயுற்ற- sickly)* பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட தலைவர்களில் அதிக விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களை அடையாளப்படுத்துகிறார். கிலியோன் (ஏங்குகிற, அழிவு - *pining, destruction)* பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட தலைவர்களில் குறைந்த விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களை அடையாளப்படுத்துகிறார். அவர்கள் எல்லாரும் மில்லர் இயக்கத்தில் இருந்தபோது அதிகமாகவோ குறைவாகவோ கனி கொடுத்தவர்களாக இருந்தார்கள் (எப்பிராத்தியர்கள்). யூதா என்ற வார்த்தை "பாராட்டப்படுகிற" என்ற அர்த்தமுடையதாக இருக்

தூது நிரல்

1. ரூத் - அடையாளம் மற்றும் நிஜநிறைவேறுதல் 1
2. ஆபிரகாமின் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது.....20
3. ஸ்விஸ் நாட்டுப் பயண வழிகாட்டி கற்பித்த பாடம்.....23

கிறது. இங்கே அது தேவனுடைய ஜனங்களின் பாராட்டத்தக்கச் செயல் எல்லையைக் குறிக்கிறது. அவர்கள் அந்த செயல் எல்லையில் இருப்பது பாராட்டத்தக்க ஒரு காரியமாக இருந்தது. அவர்கள் மோவாபுக்குத் திரும்பிச் செல்வது விசுவாச உண்மைத்துவமில்லாத ஒரு செயலாக இருந்தது. இந்த நபர்களின் நிஜநிறைவேறுதல்கள் பெயர் சபைக்குத் திரும்பிச் செல்வதில் அடங்கியுள்ள விசுவாச உண்மைத்துவமின்மையை இது அடையாளப்படுத்து கிறது.

3. ரூத் 1:3 <u>நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்து போனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும் மாத்திரம் இருந்தார்கள்.</u> எலிமெலேக் கின் மரணமானது, பெயர் சபையிலுள்ள உலகத்தனமான சூழ்நிலைகளினால் கிரீடத்தை இழந்த தலைவர்களின் ஆவிக்குரிய பண்புகள் விழுங்கப்படுவதை அடையாளப் படுத்துகிறது. அவர்களுடைய புது சிருஷ்டிகள் செய லற்று போயின. நகோமி மற்றும் அவளுடைய குமாரர்கள் இவ்வாறு விட்டுவிடப்படுவது என்பது, அவர்களால் அடையாளப்படுத்தப்படும் நபர்கள் இவ்வாறு உலகத் தனமான பற்றுடைய கிரீடத்தை இழந்த தலைவர்களின் உதவியையும், ஐக்கியத்தையும் இழப்பதினால் அடைந்த துயரத்தை அடையாளப்படுத்துகிறது.

4. ரூத் 1:4 <u>இவர்கள் மோவாபியரில் பெண் கொண்டார்கள்; அவர்களில் ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத்; அங்கே ஏறக்குறையப் பத்து வருஷம் வாசம்பண்ணினார்கள்.</u> மக்லோன் மற்றும் கிலியோன் மோவாபியரில் பெண் கொள்வது என்பது, இந்த இரு வகையான பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட தலை வர்கள்,அவர்களுடைய இயல்புகளுக்கேற்ப, அவர்களால் வழிநடத்தப்படக் கூடிய பரீட்சார்த்த ரீதியில் நியாய மாக்கப்பட்டவர்களுடன் தங்களை இணைத்துக் கொள் வதை அடையாளப்படுத்துகிறது: ஓர்பாள் (வணங்காக் கழுத்துள்ள, பிடிவாதமுள்ள - *stiff-necked, stubborn*) என் பவள், குறைந்த விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட் சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட தலைவர்களுடன் இணைந்தவர்களை அடையாளப்படுத்துகிறாள். ரூத் (நட்பு, சிநேகம் - *friendship*) என்பவள், அதிக விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப் பட்ட தலைவர்களுடன் இணைந்தவர்களை அடையாளப் படுத்துகிறாள். அவர்கள் மோவாபில் பத்து வருஷம் வாசம்பண்ணுவது என்பது, கிரீடத்தை இழந்தவர்களும், அவர்களோடு இணைந்த மற்ற நியாயமாக்கப்பட்டவர் களும் பெயர் சபையில் தங்கியிருந்த முழு காலத்தை அடையாளப்படுத்துகிறது.

5. ரூத் 1:5 <u>பின்பு மக்லோன் கிலியோன் என் னும் அவர்கள் இருவரும் இறந்துபோனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்.</u> மோவாபில் நிகழ்ந்த, மக்லோன் மற்றும் கிலியோனின் மரணமானது, பரீட் சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களின் சரியான ஆவி பெயர் சபையிலுள்ள நிலைமைகளினால் விழுங்கப் படுவதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் தங்கள் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட நிலையை இழந் தார்கள். நகோமி தன் குமாரர் இருவரையும் தன் புருஷ னையும் இழந்து தனித்தவளாவது என்பது, கிரீடத்தை இழந்தவர்களால் நேசிக்கப்பட்டவர்கள், விசுவாச உண்மைத்துவமற்றவர்களாக மாறி, அவர்களைக் கைவிடு வதை அடையாளப்படுத்துகிறது. இது ஆவிக்குரிய துயரத்தை அடையாளப்படுத்துகிறது. அதைக் குறித்து அவள் புலம்புவது (வச.20,21) என்பது, கிரீடத்தை இழந்தவர்கள் பரிசுத்தவான்களை விட்டு வந்ததினால், பெயர் சபையில் அவர்களுக்குத் துயரமான ஆவிக்குரிய அனுபவம் இருந்ததை அவர்கள் அங்கீகரிப்பதை அடை யாளப்படுத்துகிறது.

6. ரூத் 1:6 <u>கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்க ளோடேகூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து,</u> ... தேவன் இஸ்ரயேலர்களுக்கு ஆகாரத்தைத் திரும்ப அருளுவது என்பது, தேவன் பரூஷியா சத்தியத் தைக் கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது (எலியா இரண்டாம் அடையைப் புசிப்பது மற்றும் இரண்டாம் பாத்திரத்தில் தண்ணீரைக் குடிப்பது). இந்த ஆகாரம் *1874*-ம் வருடத்தில் நம்முடைய கர்த்தர் திரும்ப வந்தபோது கொடுக்கப்படத் தொடங்கினது. நம்முடைய கர்த்தர் மனுஷர் காணக்கூடாத விதத்தில் வருவார் என்ற சத்தியம் அந்த வருடத்தில் தெளிவாக்கப்பட்டது. இதுவே அந்த "ஆகாரத்தின்" முதல் சத்தியமாக இருந்தது.

7. நகோமி அதைக் கேள்விப்படுவது என்பது, *1844* முதல் *1874* வரையுள்ள காலத்தில் பெயர் சபைக்குத் திரும்பப்போன கிரீடத்தை இழந்தவர்களால், *1874* முதல் *1878* வரையுள்ள காலத்தில் கொடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டு, சத்தியம் மறுபடியும் முன்னேறிக்கொண்டு, தெளி வாகிக்கொண்டு, அதிகரித்துக்கொண்டிருப்பதை அறிந்து கொள்வதை அடையாளப்படுத்துகிறது. அவளும், அவ ளோடு அவளுடைய மருமக்களும் திரும்பிவரும்படி எழுந்திருப்பது என்பது, அவர்களால் அடையாளப்படுத் தப்பட்டவர்கள் அக்காலத்திற்கு ஏற்ற சத்தியத்தில் ஆர்வங்கொள்வதை அடையாளப்படுத்துகிறது. தேவ னுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, கிரீடத்தை இழந்தவர்கள் திரும்பச் சத்திய இயக்கத் திற்குள் வர நோக்கங்கொள்வதைக் காண்பிக்கிறது ("திரும்பிவரும்படி எழுந்து").

8. ரூத் 1:7 <u>தன் இரண்டு மருமக்களோடுங்கூடத் தானிருந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டாள். யூதா தேசத் திற்குத் திரும்பிப்போக, அவர்கள் வழிநடக்கையில்,...</u> அவர்கள் தங்கள் ஸ்தலத்தை விட்டு புறப்படுவது என்பது, அவர்கள் அதுவரை பற்றிக்கொண்டிருந்த பெயர் சபை யின் தப்பறைகளையும், நடைமுறைகளையும் விட்டு விட்டு, பரூஷியா சத்தியத்தை நோக்கி முன்னேறத் தொடங்குவதை அர்த்தப்படுத்துகிறது. இந்த மூன்று வகுப்பாரும் இவ்வாறு முன்னேறினார்கள்.

9. ரூத் 1:8-10 <u>நகோமி தன் இரண்டு மருமக் களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப்போனவர்களுக் கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக. கர்த்தர் உங்கள் இரு வருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள். அப்பொழுது அவர்கள் சத்த மிட்டு அழுது, அவளைப் பார்த்து: உம்முடைய ஜனத் தண்டைக்கே உம்முடன்கூட வருவோம் என்றார்கள்.</u> நகோமியின் இரண்டு மருமக்கள் தங்கள் சொந்த இனத் தாரிடத்திற்குத் திரும்பிப்போக அவள் செய்த முதல் வேண்டுகோளானது, கிரீடத்தை இழந்த புது சிருஷ்டி களின் வார்த்தைகளினால் அல்லாமல், செயல்களின் மூலம் செய்யப்பட்டது. அதின் பொருள் இவ்வாறாக இருக்கிறது: கிரீடத்தை இழந்த புது சிருஷ்டிகள் நிஜநிறை வேறுதலான கானானாகிய சத்தியம் மற்றும் அதன் ஆவி யின் செயல் எல்லையை நோக்கி முன்னேறிக்கொண்டி

ருக்கையில், அவர்களுடைய செயல்கள், அதிகமாகவோ குறைவாகவோ விசுவாச உண்மைத்துவமாக இருந்த பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டிருந்தவர்களைச் சற்று இடறலடையச் செய்தது.இது எலிசா திரும்பிச் செல்ல வேண்டும் என்று எலியா அவரிடம் சொன்னதற்கு ஒத்த தாக இருக்கிறது. இதுவும் விசுவாச உண்மைத்துவமுள்ள சிறுமந்தை வகுப்பாரின் வார்த்தைகளை அல்லாமல் செயல்களைக் குறிக்கிறது. விசுவாச உண்மைத்துவமுள்ள சிறு மந்தை வகுப்பாரின் செயல்கள், கிரீடத்தை இழந்த வர்களுக்குப் பிடிக்காதவைகளாக இருந்தன. நிஜநிறை வேறுதலான எலிசா வகுப்பார் அதைக் கஷ்டப்பட்டு மேற்கொண்டார்கள்.

10. நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பார் பெயர் சபையின் வழிகளை எதிர்த்து, சத்தியத்தில் முன்னேறும் வழியில் பல கஷ்டங்களைச் சந்தித்து, அவை களை விசுவாச உண்மைத்துவத்துடன் மேற்கொண்டார் கள். ஆனால் மற்றவர்களுக்கு அவைகளை மேற்கொள் வது கடினமானதாக இருந்தது. அதனால் நிஜநிறைவேறு தலான நகோமி வகுப்பாரைப் பின்பற்றுவதை அவர்கள் தடை செய்வதைப் போல் மருமக்கள் (ரூத் மற்றும் ஒர்பாள்) வகுப்பார்களுக்குத் தோன்றியது.

11. நிஜநிறைவேறுதலான நகோமியின் இந்த தடை செய்யும் மனநிலையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, பெயர் சபையில் ஒரு சுகமான வாழ்க்கையை வாழ்வது அவர்களுக்கு எளிதான வழியாக தோன்றியது. இவ்வாறாக அவர்கள் நிஜநிறைவேறுதலான மோவாபில் சுகத்தையும், மனதிற்கு உகந்த தோழர்களையும் கண்டடை வார்கள் என்று நிஜநிறைவேறுதலான நகோமியின் நடத்தை அவர்களுக்குச் சொல்வதாக இருந்தது.

12. நகோமி ஒர்பாளையும் ரூத்தையும் முத்தமிடு வது என்பது, நியாயமாக்கப்பட்ட வகுப்பாரை விட்டு பிரிந்துபோகவிருப்பதால், கிரீடத்தை இழந்தவர்கள் அவர் களிடம் வெளிப்படுத்தின அன்பை வெளிப்படுத்துகிறது. ஒர்பாள் மற்றும் ரூத் அழுவது என்பது, அந்த நிஜநிறை வேறுதலான வகுப்பார்கள் அந்த பிரிவை நினைத்து துக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

13. பெயர் சபையின் வழிகளுக்கு விரோதமான நகோமி வகுப்பாரின் விசுவாச உண்மைத்துவமானது, மரண நிலை, நித்திய வேதனை, பரம அழைப்பு, வருங் காலத்தில் ஜீவன் அடைவதற்காக சோதிக்கப்படுவதின் ஒரு வாய்ப்பு *(future probation)*, இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் ஆகியவைகளைக் குறித்து "மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் மற்றும் மேய்ப்பர்கள்" போதிக்கிற கருத்துக்களுக்கு எதிரிடையான சத்தியத்தைப் போதிப் பதில் வெளிப்பட்டது. இது அந்த மேய்ப்பர்களின் வெளிப்படையான எதிர்ப்பைத் தூண்டிவிட்டது.

14. தங்கள் உருவகமான புருஷர்களாக இருந்த நிஜநிறைவேறுதலான மக்லோனையும், கிலியோனையும் இழந்த நிஜநிறைவேறுதலான ரூத் மற்றும் ஒர்பாள், மற்ற தலைவர்களைக் [புருஷன்] கொண்ட ஒரு கூட்டத்தை விரும்பினார்கள். "மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் மற்றும் மேய்ப்பர்கள்" தங்களுக்குத் தலைவர்களாக இருப்பார்கள் என்று ஆர்வத்துடன் எதிர்பார்த்தார்கள். நிஜநிறைவேறுதலான நகோமி செயல்பட்ட முறையினால் அந்த தலைவர்கள் அவர்களை விட்டு விலகியிருந்தார்கள். ஆகையால் நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பாரை மேலும் பின்பற்றுவது சரியானதாகுமா என்று அவர்கள் எண்ணத் தொடங்கினார்கள். ஏனென்றால் அவர்கள் அவர்களைப் பின்பற்றினால், அந்த நிஜநிறைவேறுதலான புருஷர்களைப் (தலைவர்களை) பெற்றுக்கொள்ள முடி யாது.

15. இவ்வாறாக நிஜநிறைவேறுதலான நகோமி செயல்பட்ட முறையும், அதனால் மந்தையில் பிரஸ்தாப மானவர்கள் மற்றும் மேய்ப்பர்களின் மேல் உண்டான விளைவுகளும், நிஜநிறைவேறுதலான ஒர்பாள் மற்றும் ரூத் வகுப்பார் அந்த மேய்ப்பர்களைத் தங்கள் உருவக மான புருஷர்களாக பெற்றுக்கொள்வதற்கு, நிஜநிறை வேறுதலான நகோமி வகுப்பாரை விட்டு விடவேண்டும் என்று சொல்வதாக இருந்தது. ஏனெனில் நிஜநிறை வேறுதலான ரூத் மற்றும் ஒர்பாள் வகுப்பார் அந்த மேய்ப்பர்களைத் தங்கள் உருவகமான புருஷர்களாக ஆக்கிக்கொள்ள தற்காலிகமாக எண்ணிக்கொண்டிருந் தார்கள். இவ்வாறாக நிஜநிறைவேறுதலான நகோமியின் போக்கினால் உண்டான சூழ்நிலைகள் அவர்களுக்கு இடையூறாக இருந்தன. ஆனால் கர்த்தர் மீதும், சத்தியத் தின் மீதும், நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பார் மீதும் அவர்களுக்கு இருந்த அன்பை, மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் மற்றும் மேய்ப்பர்களை உருவக மான புருஷர்களாக அல்லது தலைவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்திற்கு மேலாக வைப் பதின் மூலம் அவர்கள் அந்த இடையூறுகளை மேற் கொண்டார்கள். அதுவரை இந்த இரு வகுப்பார்களும் சரியாகச் செயல்பட்டார்கள்.

16. ரூத் *1:11-13* அதற்கு நகோமி: என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர் கள்? உங்களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ? என் மக்களே, திரும்பிப்போங்கள்; நான் வயது சென்றவள்; ஒரு புருஷனுடன் வாழத்தக்கவளல்ல; அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு உண்டாயிருந்து, நான் இன்று இரவில் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும், அவர்கள் பெரியவர்களாகுமட்டும், புருஷ ருக்கு வாழ்க்கைப்படாதபடிக்கு நீங்கள் பொறுத்திருப்பீர் களோ? அது கூடாது; என் மக்களே, கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள்நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது என்றாள். தன் மருமக்களைத் திரும்ப அனுப்புவதற்கு நகோமி செய்த இரண்டாம் முயற்சியில் அவள் பின்வரும் காரணங் களைக் கூறினாள்: *1)* அவள் வயது சென்றவளாக இருந்த தால் இனி பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாது, *2)* அவள் புருஷன் இல்லாதவளாக இருந்தாள், *3)* ஒரு வேளை அவள் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும், அந்த பிள்ளைகள் பெரிய வர்களாகி, அவர்களை மணம் செய்துகொள்வதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதாக இருக்கும்.

17. நிஜநிறைவேறுதலான புருஷர்களை அல்லது தலைவர்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வமாக இருந்த நிஜநிறைவேறுதலான ரூத் மற்றும் ஒர்பாள் வகுப் பாரிடம், நிஜநிறைவேறுதலான நகோமி செயல்பட்ட வித மும், அதன் விளைவுகளும், நகோமி ரூத் மற்றும் ஒர்பா ளுக்குச் சொன்ன காரியங்களின் நிஜநிறைவேறுதலாக இருந்தன. அந்த செயல்களும் அதன் விளைவுகளும் இவ் வாறாக இருந்தன: *1)* நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பார் பெயர் சபையில் சத்தியத்திற்குச் சாட்சி கூறுவதால் ரூத் மற்றும் நகோமி வகுப்பார்களில் பலர் கூட்டப்பட்டாலும், தலைவர்களாக ஆகக்கூடிய எவர் களையும் அவர்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளவில்லை [இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் *(sons* - ஆண் பிள்ளைகள்) உண்டாகுமோ?], *2)* நிஜநிறை வேறுதலான நகோமி வகுப்பாருக்குத் தலைவர்களாக



இருக்கக்கூடியவர்களும் அவர்களோடு இல்லாதிருந்தார் கள் (ஒரு புருஷனுடன் வாழத்தக்கவளல்ல), 3) ஒரு வேளை இந்த இரண்டு இடையூறுகளை மேற் கொண்டாலும், நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பார் மற்றவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும் வேலை மிக வும் தாமதமாக முன்னேறுவதால், நிஜநிறைவேறுதலான ரூத் மற்றும் ஓர்பாள் வகுப்பார் தலைவர்களைப் (புருஷனை) பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் காத் திருக்க வேண்டியதாக இருக்கும். ஆனால் பெயர் சபை தலைவர்களைத் தங்கள் தலைவர்களாக (புருஷராக) ஏற்றுக்கொண்டால் அது விரைவாக நிகழக்கூடியதாக இருக்கும்.

18. ரூத் *1:14,15* அப்பொழுது அவர்கள் சத்த மிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப்போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள். அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத் துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரி யின் பிறகே திரும்பிப்போ என்றாள். நகோமியின் மூன்றாம் முயற்சி ரூத்தை மட்டுமே நோக்கி செய்யப் பட்டது. நிஜநிறைவேறுதலான ஓர்பாவின் ஜனங்கள் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களாக இருந்தார் கள். அவர்களுடைய தேவர்கள் அவர்களுடைய மதப் பிரிவு போதனைகளாக இருந்தன. நிஜநிறைவேறுதலான நகோமியின் மூன்றாம் முயற்சி என்னவாக இருந்தது என்பதை இது நமக்கு மறைமுகமாகத் தெரிவிக்கிறது. நிஜநிறைவேறுதலான நகோமி வகுப்பார் மதப்பிரிவு கொள்கைகளை (தேவர்கள்) முழுமையாக மறுதலித்து, பெயர் சபையை விட்டு வெளியேற தீர்மானமாக இருந் தார்கள். இது தற்காலிகமாக நிஜநிறைவேறுதலான ரூத் வகுப்பாரை அவர்களிடமிருந்து விலகிப்போகச் செய்தது. ஏனென்றால் பெயர் சபையின் இந்த மதப்பிரிவு போதனைகளைத் தேவ வாக்காக உறுதியாக பற்றிக் கொள்ள வேண்டும் என்றும், பெயர் சபையானது தேவ னுடைய வாயாக அல்லது அவர் உபயோகிக்கும் வழியாக இருப்பதால் அவர்கள் அதை விட்டு செல்லக் கூடாது என்றும் அவர்கள் நம்பியிருந்தார்கள். ஆகையால் நிஜ நிறைவேறுதலான நகோமி செயல்பட்ட முறை அவர் களுக்கு முதலில் தேவபக்தி இல்லாத ஒரு போக்காகத் தோன்றியது. ஆகையால் இவ்வகையான தேவபக்தி இல் லாத போதனைகளையும், ஐக்கியங்களையும் விட்டு விட்டு, பெயர் சபையிலுள்ள போதனைகளுக்கும், ஐக்கியங்களுக்கும் திரும்புவது நலமானதாகும் என்று அவர்கள் முதலில் எண்ணினார்கள். ஆனால் நகோமி யைப் பின்பற்றுவதற்கு இடையூறாக இருந்த மூன்றாம் காரியத்தையும் ரூத் மேற்கொண்டதைப் போலவே, நிஜ நிறைவேறுதலான ரூத் வகுப்பாரும் அவர்களுடைய பிரதிஷ்டைக்கு இடையூறாக இருந்த இந்த காரியத்தை மேற்கொண்டார்கள்.

19. ரூத் *1:16,17* அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத் திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரண மடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக் கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன் றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக் கடவர் என்றாள். தன்னைத் தடை செய்ய முயல வேண் டாம் என்று ரூத் நகோமியிடம் சொல்வது, நிஜநிறை வேறுதலான ரூத் வகுப்பார் இந்த சூழ்நிலையிலுள்ள தடைகளை உண்மைத்துவத்துடன் எதிர்ப்பதை அடை யாளப்படுத்துகிறது. *16,17*-ம் வசனங்களில், நகோமி யையும், அவளுடைய தேசத்தையும், அவளுடைய ஜனத் தையும், அவளுடைய தேவனையும் மரண பரியந்தமும் பற்றிக்கொள்ள ரூத் செய்த தீர்மானம் மிகவும் உருக்க மான வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. இது நிஜநிறைவேறுதலான ரூத் வகுப்பாரின் பிரதிஷ்டையின் செயலை அடையாளப்படுத்துகிறது. அந்த செயலானது, தேவனையும், சத்தியத்தையும், சத்தியத்தின் ஆவியையும், பிரதிஷ்டை செய்த வகுப்பாரைச் சேர்ந்த சகோதரர் களையும் மரண பரியந்தமும் பற்றிக்கொள்ள அவர்கள் செய்த தீர்மானமாக இருந்தது. ரூத் செய்த இந்த தீர்மானமானது, அவளை இஸ்ரயேல் சபையைச் சேர்ந்த அந்நிய அங்கத்தினராக *(stranger member)* ஆக்கியது. இவ்வாறாக ரூத் அந்தத் தீர்மானம் செய்ததிலிருந்து, பிரதிஷ்டை செய்த விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட் சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களை அடையாளப் படுத்துகிறாள்; பிரதிஷ்டை செய்த, ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களை அடையாளப்படுத்து கிறாள், அதாவது வாலிபரான பாத்திரவான்களை அடை யாளப்படுத்துகிறாள். ஏனென்றால் கானான் என்பது சத்தியம் மற்றும் அதன் ஆவியின் செயல் எல்லையை அடையாளப்படுத்துகிறது. தேசத்தில் பிறந்தவர்கள், சத்தியம் மற்றும் அதன் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட வர்களை அடையாளப்படுத்துகிறார்கள். ஆனால் தேசத் தில் பிறவாமல், (அந்நியர்களாக) அதில் தங்கியிருப் பவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்றா லும், சத்தியம் மற்றும் அதன் ஆவியில் வாசம் பண்ணு பவர்களை அடையாளப்படுத்துகிறார்கள். அதாவது அவர்கள் வாலிபரான பாத்திரவான்களை அடையாளப் படுத்துகிறார்கள்.

20. ரூத் *1:18* அவள் தன்னோடேகூட வர மன உறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை. ரூத் தன்னைப் பின் பற்றுவதைத் தடுக்க நகோமி முயலுவதை விட்டு விட்டதைப் போலவே, முழுமையாகப் பிரதிஷ்டை செய்து, அதன் ஆவியை விசுவாச உண்மைத்துவத்துடன் காத்துக்கொள்பவர்களுக்கு, புது சிருஷ்டிகள் (நகோமி) செயல்படும் முறை இனி தடையாக இருக்கவில்லை.

21. ரூத் *1:19* அப்படியே இருவரும் பெத்லெகேம் மட்டும் நடந்துபோனார்கள்; அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தபோது, ஊரார் எல்லாரும் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியோ என்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் பெத்லெகேமுக்கு போய்ச் சேரும்வரை பிரயாணம்பண்ணுவதென்பது , உண்மைத்

துவமுள்ள கிரீடத்தை இழந்தவர்களும் (நகோமி), விசுவாச உண்மைத்துவமுள்ள பாத்திரவான்களும் (ரூத்) காலத்திற்குரிய வேதாகம சத்தியத்திற்குள் (பெத்லெகேம்) முழுமையாக வந்து, அதிலுள்ளவர்களுடன் வாசம் பண்ணும்வரை சத்தியம் மற்றும் அதன் ஆவியில் விடாமுயற்சியுடன் முன்னேற்றமடைவதை அடையாளப் படுத்துகிறது. அவர்கள் முற்காலத்தில் பாபிலோனிலிருந்து பிரிக்கப்பட்ட வாசஸ்தல வகுப்பாருடன் *(Sanctuary class)* இருந்து, அந்த சகோதரர்களை விட்டு வந்தவர்களாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் பாபிலோனிலிருந்து பிரிக்கப்பட்ட வாசஸ்தல வகுப் பாரிடத்திற்குத் திரும்ப வரும்போது, அந்த வாசஸ்தல வகுப்பில் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருந்தவர்களின் ஆர்வத்தை அதிகமாகத் தூண்டக்கூடியதாக இருந்தது. முற்காலத்தில் அவர்களை விட்டு சென்று, இப்பொழுது அறுவடை காலத்தில் திரும்ப வந்தவர்களை அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். ஊரார் எல்லாரும் நகோமியைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியோ என்று பேசிக்கொள்வது இதை அடையாளப்படுத்துகிறது. நிஜ நிறைவேறுதலில் அவர்கள் இருதயப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார்கள் என்று நாம் நிச்சயமாக அறிவோம். அடையாளத்திலும், நிஜநிறைவேறுதலிலும் ரூத் பெத்லெகேமுக்கு வருவது என்பது சத்திய ஜனங் களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாக இருந்தது. அவர் களையும் அவர்கள் இருதயப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள்.

22. ரூத் *1:20* <u>அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங் கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்</u>. தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ர யேலர்களை விட்டு சென்றதற்காகத் தேவன் தன்னைச் சிட்சித்ததை நகோமி உணர்ந்தாள் என்று அவள் *20*-ம் வசனத்தில் சொன்ன வார்த்தைகள் காண்பிக்கின்றன. நிஜநிறைவேறுதலான நகோமி தப்பறையில் இருந்த காலத்தில் *(1844-1874)* அனுபவித்த ஏமாற்றங்களையும், இழப்புகளையும் அவளுடைய வார்த்தைகளும், நிலையும் தெரிவித்தன என்பதை இது அடையாளப்படுத்துகிறது. *1844* முதல் *1874* வரையுள்ள வருடங்கள் பஞ்சத்தின் வருடங்களாக இருந்தன. ஏனென்றால் அக்காலத்தில் முன்னேற்றமடைகிற சத்தியம் மிக குறைவாகவே இருந்தது. இருந்தாலும் அந்த சத்தியம் குறைவுபட்ட காலத்திலும், சத்தியம் மற்றும் அதன் ஆவியில் தொடர்ந்து நீடித்திருந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், அவளுடைய தற்கால நிலையைத் தெளிவாகக் கண்டுக்கொண்டார் கள்.

23. நகோமி வகுப்பார் மற்றவர்களின் மனதிற்கு உகந்தவர்களாக இருப்பதை விரும்புகிறவர்களாக இருந் தவர்கள் என்பது நகோமி என்ற பெயர் அர்த்தத்தின் மூலம் (மனதிற்கு உகந்த என்ற அர்த்தம்) காண்பிக்கப் படுகிறது. இந்த இயல்பினால் அவர்கள் தங்களுடைய தலைவர்களின் தவறான கட்டளைகளுக்கு எளிதாக இணங்குகிறவர்களாக இருந்தார்கள். அதனாலே அவர் கள் ஏமாற்றம் மற்றும் இழப்பு என்னும் கசப்பான (மாரா) அனுபவங்களுக்கு ஆளானார்கள். அன்பான சகோதரர் களே, சத்தியம் மற்றும் அதன் ஆவியை விட்டுவிட்டு, தப்பறை மற்றும் உலகத்தின் ஆவிக்குள் செல்கிறவர் களின் அனுபவம் எப்பொழுதுமே அவ்வாறே இருக்கும். ஆகையால் தலைவர்களின் கட்டளைகளுக்கு எளிதில் இணங்கும் இயல்புக்கு எதிராக நாம் எப்பொழுதுமே விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்களிலுள்ள கிட்டத்தட்ட எல்லா தலைவர்களும் தவறாக வழிநடத்துபவர்களாக இருக்கிற இக்காலத்தில் (பாஸ்டர் ஜான்சனின் காலத்தில்) இது இன்னும் விசேஷ மாக உண்மையாக இருக்கிறது.

24. ரூத் *1:21* <u>நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பி வரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்</u>. தன்னு டைய வறுமையைக் கர்த்தரிடமிருந்து வந்த சிட்சையாக உணர்ந்த நகோமி துக்கப்படுவது என்பது, நிஜநிறை வேறுதலான நகோமி வகுப்பார் வாசஸ்தல வகுப்பாரின் மத்தியில் பரூஷியா சத்தியம் மற்றும் அதன் ஆவிக்குள் திரும்ப வந்த போது செய்த கிரியைகளையும், சொன்ன வார்த்தைகளையும் அடையாளப்படுத்துகிறது.

25. ரூத் *1:22* <u>இப்படி நகோமி மோவாபிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவந்தாள்; வாற்கோதுமை அறுப் பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தார் கள்</u>. *22*-ம் வசனமானது *19-21* வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட அறிக்கைகளை வலியுறுத்தும் விதத்தில் அவைகளைத் திரும்பச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. *1844* முதல் *1874* வரையுள்ள காலத்தில் பாபிலோனி லிருந்து பிரிக்கப்பட்டிருந்த வாசஸ்தல வகுப்பாரிட மிருந்து விலகிப்போன சில சகோதரர்கள் "ஆதியில் கொண்டிருந்த அன்புக்குத்" திரும்ப வந்தார்கள் என்ற உண்மையையும், *1878*-ம் வருடத்திலிருந்து பிரதிஷ்டை செய்த, ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத, விசு வாச உண்மைத்துவமுள்ள ஒரு வகுப்பாரைத் தங்களுடன் கொண்டுவந்தார்கள் என்ற உண்மையையும் தேவன் வலியுறுத்துவதை இது அடையாளப்படுத்துகிறது.

26. நகோமி மற்றும் ரூத் வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் திரும்பி வந்தார்கள் என்பதற்கு காலவரிசை ரீதியான ஒரு நிஜநிறைவேறுதல் இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. பாலஸ்தீனா வில் வாற்கோதுமை அறுப்பு கோதுமை அறுப்புக்கு முன்பு நிகழும். கோதுமை என்பது வாற்கோதுமை யைவிட அதிக மதிப்புவாய்ந்த தானியம் என்று நாம் அனைவரும் அறிவோம். கோதுமை அறுப்பு என்பது, விடாமுயற்சியுள்ள சிறுமந்தை அங்கத்தினர்களை விசேஷமாக ஆதாயப்படுத்தும் அறுவடையின் பகுதியை அடையாளப்படுத்துகிறது. வாற்கோதுமை அறுவடை என்பது கிரீடத்தை இழந்தவர்களை விசேஷமாக ஆதாயப் படுத்தும் அறுவடையின் பகுதியை அடையாளப்படுத்து கிறது. "கூலியாக்க கொடுக்கப்பட்ட ஒரு பணம் உவமை யிலே" *(Penny parable)* நாம் பின்வரும் உண்மைகளை அறிந்துகொண்டதை நினைவுகூருவோம்: முதலாம் மணி வேளையிலிருந்து பதினோராம் மணி வேளைவரையுள்ள காலத்தில் அழைக்கப்பட்டவர்களில் பெரும்பான்மை யானோர் கிரீடத்தை இழந்தார்கள். ஆனால் அந்த நாளின் முடிவில் பதினோராம் மணிவேளைக்குப் பிறகு அழைக் கப்பட்ட பெரும்பான்மையானோர் கிரீடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்கள். வாற்கோதுமை மற்றும் கோதுமையின் அறுவடையின் காலங்களும், அவைகளில் நடந்த கூட்டிச்சேர்க்கப்படுதல்களும், சுவிசேஷ யுக அறு வடையின் இந்த இரண்டு காலங்களையும், அவைகளில் நடந்த கூட்டிச்சேர்க்கப்படுதல்களையும் அடையாளப் படுத்துகின்றன.

27. இவ்வாறாக நகோமி மற்றும் ரூத் வாற் கோதுமை அறுப்பின் துவக்கத்தில் பெத்லெகேமிற்கு

வருவது என்பது பின் வரும் காரியத்தை அடையாளப் படுத்துகிறது: முன்பு மில்லர் இயக்கத்தின் (Miller Movement) சத்தியத்தில் இருந்து, பின்பு அதை விட்டுவிட்டு பெயர் சபைக்குத் திரும்பின சில கிரீடத்தை இழந்தவர் கள், 1878 முதல் 1881 வரையுள்ள காலத்தில் நிகழ் கால சத்தியத்திற்குள் திரும்ப வருவதையும், பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களைத் தங்களுடன் கொண்டுவருவதையும் அடையாளப்படுத்துகிறது. இவ் வாறாக அவர்கள் "கூலியாகக் கொடுக்கப்பட்ட ஒரு பணம் உவமையின்" முதலாம் அழைப்பின் காலத்தில், அதாவது 1874 முதல் 1881 வரையுள்ள காலத்தில் நிகழ் கால சத்தியத்திற்குள் வந்தார்கள். இது நிஜநிறை வேறுதலான வாற்கோதுமை அறுப்பின் துவக்கமாக இருந்தது.

28. நம்முடைய பாஸ்டர் ரஸல் காண்பித்ததைப் போல், 1878-ம் வருடத்தில் புறஜாதியாருடைய நிறைவு உண்டானது (P Vol. 2, பக்கம் 213-ஐ பக்கம் 218 மற்றும் 223 உடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்). அதுமுதல் 1881-ம் வருடம் வரை அவர்கள் பரீட்சிக்கப்பட்டிருந்தார்கள். அந்த பரீட்சையில் சில கிரீடங்கள் இழக்கப்பட்டதால், 1881-ம் வருடத்திலிருந்து விசேஷமான அழைப்புகள் (special calls) கொடுக்கப்படுவது தேவையாயிற்று. 1881-ல் பொது அழைப்பு (general call) முழுமையாக முடிவுக்கு வந்தது என்று இது நிரூபிக்கிறது. ஆகையால் 1878 முதல் 1881 வரையுள்ள காலத்தில் பிரதிஷ்டை செய்து சத்தியத் திற்குள் வந்த ரூத் வகுப்பாருக்கு அளிக்கப்படத்தக்கக் கிரீடங்கள் இல்லாதிருந்தன. அதற்குப் பிறகும் கூட ரூத் கிரீடத்தை அடைவதற்காக வாய்ப்பு அளிக்கப்படாத பிரதிஷ்டை செய்தவர்களை அடையாளப்படுத்துகிறாள். ஏனென்றால் அடையாளத்தில் இருந்ததைப் போலவே, நிஜநிறைவேறுதலிலும் அவள் தொடர்ந்து நிஜநிறை வேறுதலான தேசத்தில் நிஜநிறைவேறுதலான அந்நிய தேசத்தாளாக இருந்தாள். இவ்வாறாக நிஜநிறைவேறு தலின் இந்த உண்மைகள், ரூத் புத்தகத்தின் முதலாம் அதிகாரமானது, 1844 முதல் 1881 வரையுள்ள காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அடையாளப்படுத்துகிறது என்பதை நிரூபிக்கின்றன.

1881 முதல் 1916 வரையுள்ள காலத்தில் நடந்த விழுகதிர் பொறுக்குதல்

29. இப்பொழுது நாம் ரூத் புத்தகத்தின் இரண் டாம் அதிகாரத்தின் விளக்கத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம். நிஜநிறைவேறுதலில் அதற்குரிய காலம் 1881 முதல் 1916 வரையுள்ள காலமாக இருந்தது. 1881-ல் விழுகதிர்களைப் பொறுக்கும் வேலை (gleaning) தொடங் கியது. அது 1916-ல் முடிவுக்கு வந்தது.

30. ரூத் 2:1 நகோமிக்கு அவளுடைய புருஷ னாகிய எலிமெலேக்கின் உறவின்முறையில் போவாஸ் என்னும் பெயருள்ள மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இனத் தான் ஒருவன் இருந்தான். கிரீடத்தை இழந்தவர்களுக்கு (எலிமெலேக் மற்றும் நகோமி வகுப்பார்) நிஜநிறைவேறு தலான போவாஸ் ஆகிய நம்முடைய கர்த்தர் நிஜநிறை வேறுதலான இனத்தாராக இருந்தார். ஆட்டுக்குட்டியான வர் வல்லமையும், ஐசுவரியமும் உட்பட பல காரியங் களைச் சுதந்தரித்துக்கொள்ள பாத்திரவானாக இருந்தார். அந்த வல்லமையையும், ஐசுவரியத்தையும் போவாஸின் வல்லமையும், ஐசுவரியமும் அடையாளப்படுத்துகின்றன (வெளி.5:12).

31. ரூத் 2:2,3 மோவாபிய ஸ்திரீயான ரூத் என்பவள் நகோமியைப் பார்த்து: நான் வயல்வெளிக்குப் போய், யாருடைய கண்களில் எனக்குத் தயை கிடைக் குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டு வருகிறேன் என்றாள்; அதற்கு இவள்: என் மகளே, போ என்றாள். அவள் போய், வயல்வெளியில் அறுக்கிறவர் கள் பிறகே பொறுக்கினாள்; தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல் நிலம் எலிமெலேக்கின் வம்சத்தா னாகிய போவாசுடையதாயிருந்தது. தேசத்தில் அந்நியர் களாக இருந்தவர்கள் விழுகதிர்களைப் பொறுக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடும் என்று வைராக்கியமுள்ள ரூத் கண்டுணர்ந்தாள். ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்றாலும், சத்தியத்தைக் குறித்து மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருந்த வாலிபரான பாத்திரவான்களுக்கு அறுவடையில் ஊழி யம் செய்யும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருப்பதை அவர்கள் 1881-ம் வருடத்திலிருந்து உணருவதை இது அடையாளப்படுத்துகிறது. விழுகதிர்களைப் பொறுக்க நகோமி தன்னை ஊக்குவிக்க வேண்டும் என்று ரூத் செய்த வேண்டுகோளானது, வாலிபரான பாத்திரவான் கள் புது சிருஷ்டிகளின் அறுவடையில் விழுகதிர்களைப் பொறுக்க அவர்களோடிருந்த கிரீடத்தை இழந்தவர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று அவர்கள் நாடினதை அடையாளப்படுத்துகிறது.

32. ஒரு வயலில் விழுகதிர்களைப் பொறுக்க அதன் சொந்தக்காரனின் தயை ரூத்துக்குக் கிடைத்தது. அந்த வயலானது நம்முடைய கர்த்தரைப் பிரதான அறுவடையாளராகக் கொண்ட ஊழியத்தின் செயல் எல்லையை அடையாளப்படுத்துகிறது. அவர் வாலிபரான பாத்திரவான்களின் "மாமனாராகிய" நிஜநிறைவேறு தலான எலிமெலேக்கின் நெருங்கிய உறவினராக இருந்தார். அவள் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்குவது என்பது (வச.3,7), எக்லீஷியாக்களின் மத்தியில் சிறுமந்தை அறுவடையாளர்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் வாலிப பாத்திரவான்கள் ஊழியம் செய்ததை அடையாளப்படுத்து கிறது.

33. ரூத் 2:4 அப்பொழுது போவாஸ் பெத்லெகே மிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள். போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களை ஆசீர் வதிப்பது என்பது, நம்முடைய கர்த்தர் தமக்குச் சொந்த மான அறுவடையாளர்களை ஆசீர்வதிப்பதற்காக முன் னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத்தின் பண்டகச் சாலையிலிருந்து முன்வந்து, அவர்களை ஆசீர்வதிப்பதை அடையாளப்படுத்துகிறது. தேவன் போவாஸை ஆசீர் வதிக்க வேண்டும் என்று அறுக்கிறவர்கள் ஆர்வமாக விரும்புவது என்பது, நமது கர்த்தரின் சுவிசேஷ யுக அறுவடை ஊழியத்தில் தேவன் அவரை ஆசீர்வதிக்க வேண்டும் என்று சிறுமந்தை அறுவடையாளர்கள் ஜெபித்ததை அடையாளப்படுத்துகிறது.

34. ரூத் 2:5 பின்பு போவாஸ் அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக் காரனை நோக்கி: இந்தப் பெண்பிள்ளை யாருடையவள் என்று கேட்டான். அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட போவாஸின் வேலைக்காரன் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரரை" அடையாளப்படுத்து கிறான். போவாஸ் அவனிடம் ரூத் யாருடையவள் என்று கேட்பது, நிஜநிறைவேறுதலான அந்நியர் வகுப்பார் (பிரதிஷ்டை செய்து ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்

படாத வகுப்பார் – அதாவது வாலிபரான பாத்திரவான்கள்) யார் என்ற கேள்வியை நமது கர்த்தர் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரரின்" மனதில் எழுப்புவதை அடையாளப்படுத்துகிறது. 1881-ம் வருடத்திலிருந்து வெளியிடப்பட்ட பல வாட்ச் டவர் (Watch Tower) கட்டுரைகள் காண்பிப்பதைப் போல், இது 1881-ம் வருடத்திலிருந்து நிகழத் தொடங்கியது.

35. ரூத் 2:6 அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட அந்த வேலைக்காரன் பிரதியுத்தரமாக: இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடேகூட வந்த மோவாபிய பெண்பிள்ளை. கண்காணியாக வைக்கப்பட்ட அறுவடையாளர் கொடுத்த பதிலானது, 1881 முதல் வெளியிடப்பட்ட டவர் பத்திரிகைகளிலும், மற்ற எழுத்துக்களிலும் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரர்" கொடுத்த விளக்கத்தை அடையாளப்படுத்துகிறது. அவர் கொடுத்த விளக்கத்தின் பொருள் இவ்வாறாக இருந்தது: அக்காலத்தில் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதைவிட அதிக எண்ணிக்கையில் தேவ ஜனங்கள் பிரதிஷ்டை செய்துகொண்டிருந்தார்கள். பெற்றுக்கொள்ளக் கூடிய கிரீடங்கள் குறைவாக இருந்ததால், அதைவிட அதிக எண்ணிக்கையில் பிரதிஷ்டை செய்கிற இந்த பிரதிஷ்டையாளர்கள் ஒரு புது வகுப்பை உருவாக்குகிறார்கள். அது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்தவர்களைக் கொண்ட ஒரு வகுப்பாக இருக்கிறது. நாம் யோயே. 2:28-ம் வசனத்தில் "வாலிபர்களைக்" குறித்துக் கொடுக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இப்பொழுது அவர்களை வாலிபரான பாத்திரவான்கள் என்று அழைக்கிறோம். அவர்கள் ஒரு கருத்தில் மூப்பரான பாத்திரவான்களுக்கு ஒத்தவர்களாக இருந்தாலும், அவர்களிடமிருந்து வேறுபட்ட ஒரு வகுப்பாக இருப்பதைக் காண்பிப்பதற்கு இப்பொழுது நாம் அவர்களை வாலிபரான பாத்திரவான்கள் என்று அழைக்கிறோம். மேலும் அவர்களுக்கும், பெயர் சபையிலிருந்து திரும்பிவந்த கிரீடத்தை இழந்த சகோதரர்களுக்கும் (நகோமி) இடையிலுள்ள ஐக்கியத்தையும் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரர்" சுட்டிக்காட்டினார். மோவாப் தேசத்திலிருந்து வந்த நகோமியுடன் ரூத் வந்ததை அந்த கண்காணி குறிப்பிடுவதின் மூலம் இது அடையாளப்படுத்தப்படுகிறது.

36. ரூத் 2:7 அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக்கொண்டாள்; காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள்; இப்பொழுது அவள் குடிசைக்கு வந்து கொஞ்ச நேரந்தான் ஆயிற்று என்றான். இவ்வசனத்தின் கடைசி வாக்கியத் தொடரின் சரியான மொழிபெயர்ப்பு இவ்வாறாக இருக்க வேண்டும்: "அவள் கொஞ்சநேரத்திற்கும் [கூட] குடிசைக்கு [இளைப்பாறும் இடத்திற்கு] வரவில்லை (she tarried not in the [resting] house [even] a little)." விழுகதிர்களைப் பொறுக்குவதில் ரூத் வெளிப்படுத்தின ஆர்வத்தையும், சுறுசுறுப்பான உழைப்பையும் அந்த கண்காணி பாராட்டுவது என்பது, ஊழியம் செய்வதில் வாலிபரான பாத்திரவான்கள் வெளிப்படுத்தின வைராக்கியத்தை "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரர்" கனிவாக அங்கீகரித்து, அவர்களுடைய சுறுசுறுப்பான உழைப்பைப் பாராட்டுவதை அடையாளப்படுத்துகிறது.

37. ரூத் 2:8 அப்பொழுது போவாஸ் ரூத்தைப் பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு. போவாஸ் ரூத்திடம் பேசுவது என்பது, வாலிபரான பாத்திரவான்களின் நிலைக்கு ஏற்ப நம்முடைய கர்த்தர் பொருத்தமான செய்திகளை அனுப்புவதை அடையாளப் படுத்துகிறது. "மகளே, கேள்" என்ற வார்த்தைகள், வாலிபரான பாத்திரவான்களிடம் நம்முடைய கர்த்தர் வெளிப்படுத்தின கனிவான அக்கறையையும் (மகளே), அவர்களைக் குறித்து "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரர்" கொடுக்கிற செய்திக்குச் செவிசாய்க்க (கேள்) அவர்களை ஊக்குவிப்பதையும் அடையாளப் படுத்துகிறது. அவள் வேறே வயலில் போகாமலும், போவாஸின் வயலில் அவருடைய ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இருந்து விழுகதிர்களைப் பொறுக்க வேண்டும் என்று போவாஸ் அவளுக்குக் கட்டளை கொடுப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் கர்த்தருடைய அறுவடை வயலில் பிரதிஷ்டை செய்த விசுவாச உண்மைத்துவமுள்ள மற்றவர்களுடன் உழைக்க வேண்டும் என்றும், மற்ற ஏதேனும் ஒரு வேலைக்காக விழுகதிர் பொறுக்கும் வேலையை விட்டுவிடக் கூடாது என்றும் நம்முடைய கர்த்தர் அவர்களை ஊக்குவிப்பதை அடையாளப்படுத்துகிறது.

38. ரூத் 2:9 அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து, அவர்கள் பிறகே போ; ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்; உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க் குடங்களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டு கொண்டு வருகிறதிலே குடிக்கலாம் என்றான். போவாஸின் ஊழியக்காரப் பெண்கள் அறுப்பறுக்கும் வயலை ரூத் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று போவாஸ் அவளை ஊக்குவிப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் சத்தியத்தை ஆர்வமாகப் படிப்பதின் மூலம் உண்மையான அறுவடை வேலையை ஜாக்கிரதையுடன் கவனித்து, விசுவாச உண்மைத்துவமுள்ள பிரதிஷ்டை செய்தவர்களுடன் (ஊழியக்காரப் பெண்கள்) ஊழியம் செய்ய கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களை ஊக்குவிப்பதை அடையாளப்படுத்துகிறது.

39. ரூத்துக்கு எவ்வித தீங்கையும் செய்யாத படிக்குப் போவாஸ் வேலைக்காரர்களை எச்சரித்ததாகப் போவாஸ் ரூத்துக்கு உறுதியளிப்பது என்பது, அதிக திறமையுள்ள சத்திய ஊழியக்காரர்கள் வார்த்தையினாலோ, நடத்தையினாலோ, செயல்களினாலோ வாலிபரான பாத்திரவான்களை இடறலடையச் செய்யக் கூடாது என்று அவர்களுக்குப் புத்திமதி கூறியதாக நமது கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களுக்கு உறுதியளிப்பதை அடையாளப்படுத்துகிறது.

40. வேலைக்காரர் மொண்டுகொண்டு வந்த தண்ணீரைக் குடித்துத் தன் தாகத்தை தணித்துக் கொள்ளும் சிலாக்கியத்தைப் போவாஸ் ரூத்துக்கு அளிப்பது என்பது, பில்கிரிம்ஸாகவும் (pilgrims), மூப்பர்களாகவும் (elders) இருந்தவர்கள் சத்தியத்தின் கிணறாகிய வேதாகமத்திலிருந்து கொண்டுவந்த ஜீவ தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் இந்த வகுப்பாருக்கு அளிக்கப்பட்டதாக நமது கர்த்தர் அவர்களுக்கு உறுதியளிப்பதை அடையாளப்படுத்துகிறது. போவாஸ் ரூத்திடம் சொன்ன இந்த வார்த்தைகளின் நிஜநிறைவேறுதல், 1881-ம் வருடத்திலிருந்து வெளியிடப்பட்ட டவர் கட்டுரைகளின் மூலம் நம்முடைய கர்த்தர் கொடுத்தார்.

41. ரூத் 2:10 அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நிய தேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதனால் உம்முடைய கண்களில் தயை கிடைத்தது



என்றாள். போவாஸ் தனக்குக் காண்பித்த தயவை ரூத் மனத்தாழ்மையுடனும், போற்றித்துதிக்கும் பயபக்தியுடனும் அங்கீகரிப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்களுக்கு நமது கர்த்தர் காண்பித்த தயவை அவர்கள் போற்றித்துதிக்கும் பயபக்தியுடனும் அங்கீகரிப்பதை அடையாளப்படுத்துகிறது. அந்நியதேசத்தாளாய் இருக்கிற அவளுக்கு இவ்வளவு தயவு கிடைப்பதைப் பற்றி அவள் ஆச்சரியப்படுவது என்பது, சத்தியத்தில் ஜெநிப்பிக்கப்படாதவர்களாக (அந்நியதேசத்தாள்) இருந்த அவர்களுக்குச் சத்திய அறிவிலும், சத்தியத்தைப் பரப்புவதிலும், சத்தியத்தை அப்பியாசிப்பதிலும் வளரும் சிலாக்கியங்கள் ஏன் இவ்வளவு தயவாய் அளிக்கப்படுகின்றன என்பதைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

42. ரூத் *2:11* அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. அவள் மோவாபின் தேவர்களையும், தேசத்தையும், ஜனத்தையும் விட்டுவிட்டு, இஸ்ரயேலின் தேவனைத் தன் தேவனாகவும், இஸ்ரயேல் தேசத்தைத் தன் தேசமாகவும், இஸ்ரயேல் ஜனத்தைத் தன் ஜனமாகவும் தெரிந்துகொண்டதின் நிமித்தம் போவாஸ் அவளிடம் அவ்வாறு செயல்படுவதாக அவர் கொடுத்த பதில் பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: வாலிபரான பாத்திரவான்கள் பிரதிஷ்டை செய்வதின் மூலம் பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகிய வற்றையும், அவைகளை அப்பியாசிப்பவர்களையும், அவைகளுடைய இருப்பிடங்களையும் விட்டுவிட்டு, யாவே தேவனையும், அவருடைய சத்தியத்தையும், அவருடைய ஆவியையும், அவருடைய ஜனத்தையும் தங்களுடையதாகத் தெரிந்துகொண்டதின் நிமித்தம், நம்முடைய கர்த்தர் அவர்களிடம் அவ்வாறு செயல்படுவதாக அவர் அவர்களுக்கு உறுதியளித்தார் (இந்த காரியம் சம்பந்தப்பட்ட டவர் கட்டுரைகளின் மூலமும், அதற்குப் பின்பு *P. Vol 3* மற்றும் *6*-ன் மூலமும், அதற்குப் பின்பு மற்ற டவர் கட்டுரைகள் மற்றும் கேள்வி பதில்களின் மூலமும் அவர் இதைச் செய்தார்).

43. ரூத் *2:12* உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். அவளுடைய செய்கைக்குத் தக்கப் பலனைத் தேவன் அவளுக்கு அளிக்க வேண்டும் என்று போவாஸ் விரும்புவது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: ஆவிக்குரிய இஸ்ரயேலின் தேவனுக்குள் அடைக்கலமாய் வந்த வாலிபரான பாத்திரவான்களுக்குத் தேவன் கட்டளையிட்ட ஆசீர்வாதத்தை, நம்முடைய கர்த்தர் முழு விருப்பத்துடன் தம்முடைய வார்த்தை, ஆவி மற்றும் பரிபாலனத்தின் மூலம் அவர்களுக்கு அருளினார். இந்த பதிலும் மேலே குறிப்பிடப்பட்ட எழுத்துக்களின் மூலம் கொடுக்கப்பட்டது.

44. ரூத் *2:13* அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும், நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள். ரூத் கொடுத்த பதிலானது, கர்த்தராகிய யெஷுவாவின் தயவைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்காக வாலிபரான பாத்திரவான்கள் செய்த ஜெபத்தை அடையாளப்படுத்துகிறது. இவ்விதமான ஒரு விருப்பத்தை தைரியமாகத் தெரிவிப்பதற்கு அவள் கூறின காரணமானது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: கர்த்தர் அதுவரை வாலிபரான பாத்திரவான்களிடம் பேசின கனிவான மற்றும் ஆறுதலான பல வார்த்தைகளையும், அவர்களுக்காகச் செய்த பல கனிவான மற்றும் ஆறுதலான செயல்களையும் கண்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த அனைவருக்கும் அவர் தொடர்ந்து தயவை அளிக்கவேண்டும் என்று அவரிடம் மன்றாட அவர்கள் உற்சாகமடைந்தார்கள் என்று அவர்கள் அறிவித்தார்கள்.

45. ரூத் *2:14* பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளைப் பார்த்து: நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள் என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள்; அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான்; அவள் சாப்பிட்டு, திருப்தியடைந்து, மீந்ததை வைத்துக்கொண்டாள். போவாஸ் தன்னுடைய வேலைக்காரருக்காக ஆயத்தம் செய்திருந்த எளிமையான (அப்பம்) மற்றும் கூர்சுவையுடைய (அக்காலத்தில் காடி சுவையூட்டும் பொருளாக உபயோகிக்கப்பட்டது) உணவில் பங்குகொள்ள ரூத்தை அழைத்தான். இந்த வகுப்பார் எளிமையான மற்றும் கூர்மையான சத்தியங்களை உட்கொள்ளுவதை நமது கர்த்தர் விரும்புகிறார் என்ற நிச்சயத்தை அவர் அவர்களுக்கு அளிப்பதை இது அடையாளப்படுத்துகிறது. அவைகளை அவ்வாறு அழைக்கிற பல்வேறு டவர் கட்டுரைகளில் இதை நாம் காண்கிறோம். ரூத் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் அந்த நிஜநிறைவேறுதலான அழைப்பை ஏற்றுக்கொள்வதை அடையாளப்படுத்துகிறது.

46. ரூத் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்காருவது என்பது, அறுவடையாளர்களாக இருந்த சத்திய ஊழியக்காரர்களுடன் சேர்ந்து வாலிபரான பாத்திரவான்களும் சத்தியத்தில் பங்குகொள்வதை அடையாளப்படுத்துகிறது. போவாஸ் அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுப்பது என்பது, டவர் பத்திரிகையின் மூலமும், மற்ற செய்திகளின் மூலமும் இந்த வகுப்பாரின் பசியைத் தூண்டும் விதத்தில் ஆயத்தப்படுத்தப்பட்ட ஆகாரத்தைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது (லூக்.*12:37*). அவள் சாப்பிட்டு, திருப்தி

யடைவது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் சத்தியத் திற்கான பசியை நிகழ்கால சத்தியத்தினால் திருப்தி செய்து கொள்வதை அடையாளப்படுத்துகிறது. இவ் வசனத்தின் கடைசி பகுதி "மீந்ததை வைத்துக்கொண் டாள்" என்று அல்லாமல், அவள் "அவ்விடத்தை விட்டு சென்றாள்" என்று இருக்க வேண்டும் (KJV பார்க்கவும் - "and left"). அவள் சாப்பிட்ட உடனே அவ்விடத்தை விட்டுச் செல்வது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் வீணான ஊகங்களுக்காக நேரத்தை வீணாக்காமல், அவர் களுடைய பிரதிஷ்டை செய்த மனதிற்கும் இருதயத் திற்கும் தேவையாக இருந்த ஆகாரத்திலிருந்து பெற்றுக் கொண்ட பலத்தை ஊழியத்திற்காக உடனே உபயோகித் தார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது.

47. ரூத் 2:15,16 அவள் கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது, போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக்கொள்ளட்டும்; அவளை ஈனம்பண்ணவேண்டாம். அவள் பொறுக்கிக் கொள்ளும்படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான். அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்ள அவளை அனுமதிக்கவேண்டும் என்றும், அவளை அவமதிக்க வேண்டாம் என்றும், திட்டமிட்டு அவளுடைய வழியில் சிறந்த அரிக்கட்டுகளை வைக்க வேண்டும் என்றும், அவளைக் கடிந்துகொள்ளாமல் இருக்க வேண்டும் என்றும் போவாஸ் தன் வேலைக்கார ருக்குக் கட்டளையிட்டார். இது, சத்தியத்திற்காக மற்றவர் களை ஆதாயப்படுத்திக்கொள்ள நாட வாலிபரான பாத்திரவான்களை உற்சாகப்படுத்தவும் (விசேஷமாக டவர் கட்டுரைகளின் மூலம்), அவர்களை ஆவிக்குரிய தூய்மையின்மைக்கு தூண்டக்கூடிய வார்த்தைகளையும், செயல்களையும் தவிர்க்கவும், திட்டமிட்டு அவர்களு டைய வழியில் ஊழிய சந்தர்ப்பங்களை வைக்கவும், அவர் களை அவமதிக்காமலும், கடிந்துகொள்ளாமல் இருக்க வும் நம்முடைய கர்த்தர் சத்திய ஊழியக்காரருக்குக் கட்டளையிடுவதை அடையாளப்படுத்துகிறது.

48. ரூத் 2:17 அப்படியே அவள் சாயங்கால மட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள்; பொறுக்கினதை அவள் தட்டி அடித்துத் தீர்ந்தபோது, அது ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற்கோதுமை கண்டது. ரூத் நாள் முழு வதும் கதிர் பொறுக்கி, பொறுக்கினதைத் தட்டி அடிப்பது என்பது, புது சிருஷ்டிகளை ஆதாயப்படுத்தி, அபிவிருத்தி செய்வதில் வாலிபரான பாத்திரவான்கள் வெளிப்படுத் தின சுறுசுறுப்பான உழைப்பையும், திறமையையும் அடையாளப்படுத்துகிறது. ஒரு நாளில் ஒரு மரக்கால் அளவு பொறுக்குவது என்பது மிகவும் அதிக அளவில் பொறுக்குவதை அர்த்தப்படுத்தும். விழுகதிர் பொறுக் கும் வேலையில் ஈடுபடுகிற வாலிபரான பாத்திரவான் களுக்குக் கர்த்தர் கொடுத்த பெரிய அளவிலான வெற்றியை இது அடையாளப்படுத்துகிறது.

49. ரூத் 2:18 அவள் அதை எடுத்துக்கொண்டு, ஊருக்குள் வந்தாள்; அவள் பொறுக்கினதை அவளுடைய மாமி பார்த்தாள்; தான் திருப்தியாய்ச் சாப்பிட்டு மீதியாக வைத்ததையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள். தான் பொறுக்கினவைகளை எடுத்துக்கொண்டு ரூத் ஊருக்குள் வருவது என்பது, வாலிபரான பாத்திரவான்களால் ஆதாயப்படுத்திக்கொண்டவர்களை (பொறுக்கியவர் களை), அவர்கள் காலத்திற்கேற்ற சத்தியத்திற்குள் கொண்டுவருவதை அடையாளப்படுத்துகிறது. தான் பொறுக்கினவைகளை நகோமியிடம் கொண்டுவருவது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் ஆதாயப்படுத்திக் கொண்டவர்களைக் கிரீடத்தை இழந்த தங்கள் கூட்டாளிகளுக்கு அறிமுகப்படுத்துவதை அடையாளப் படுத்துகிறது. நகோமி அவைகளைப் பார்ப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் சத்தியத்திற்காக ஆதாயப் படுத்திக்கொண்டவர்களைக் கிரீடத்தை இழந்தவர்கள் கவனிப்பதை அடையாளப்படுத்துகிறது.நகோமி ரூத்துக் காக வைத்திருந்த உணவானது, கிரீடத்தை இழந்தவர்கள் ஆவிக்குரிய ஆகாரத்தில் பங்குகொண்ட பிறகு, ரூத் வகுப் பாருக்கு ஏற்றது என்று அவர்கள் எண்ணின ஆகாரத்தை அவர்களுக்குக் கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது.

50. ரூத் 2:19 அப்பொழுது அவளுடைய மாமி: இன்று எங்கே கதிர் பொறுக்கினாய், எவ்விடத்தில் வேலைசெய்தாய் என்று அவளிடத்தில் கேட்டு; உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள்; அப் பொழுது அவள்: இன்னாரிடத்திலே வேலைசெய்தேன் என்று தன் மாமிக்கு அறிவித்து: நான் இன்று வேலை செய்த வயல்காரன் பேர் போவாஸ் என்றாள். ரூத்துக்குக் கிடைத்த வெற்றியைக் கண்டு, நகோமி ஆச்சரியப்பட்டுக் கேட்ட கேள்விகள், சத்தியத்திற்காக இத்தனை பேர்கள் எவ்விடத்திலிருந்து ஆதாயப்படுத்தப்பட்டார்கள் என்று கிரீடத்தை இழந்தவர்கள் ஆச்சரியப்படுவதை அடை யாளப்படுத்துகிறது. இவ்வளவு வெற்றியை அடை வதற்கு ரூத் விசேஷமாகத் தயவு பெற்றிருக்க வேண்டும் என்று உணர்ந்து, அவளுக்குத் தயவை அளித்தவர் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நகோமி வாழ்த்துவது ("உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக") என்பது, வாலிபரான பாத்திரவான்களுக்கு ஊழியத்தில் கிடைத்த வெற்றியில் அவர்கள் அதிக தயவைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்று கிரீடத்தை இழந்தவர்கள் உணர்ந்து, அவ்வாறு தயவு செய்தவரை வாழ்த்துவதை அடையாளப்படுத்துகிறது. தனக்கு அவ்வாறு தயவளித்த வர் போவாஸ் என்று ரூத் அறிவிப்பது, வாலிபரான பாத்திரவான்கள் நம்முடைய கர்த்தரின் அறுவடையில் வேலை செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அவர் களுடைய வெற்றி கர்த்தராலானது என்றும் அவர்கள் அறிவிப்பதை அடையாளப்படுத்துகிறது.

51. ரூத் 2:20 அப்பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து: உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள்; பின்னும் நகோமி அவளைப் பார்த்து: அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின்முறையானும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளி களில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள். இவ்வசனத் தின் சரியான மொழிபெயர்ப்பு இவ்வாறாக இருக்க வேண்டும்: "அப்பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து: உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக் கும் தயவு செய்கிற அவன், கர்த்தராலே ஆசீர்வதிக் கப்படுவானாக என்றாள் (KJV பார்க்கவும் - Blessed be he of the LORD, who hath not left off his kindness to the living and to the dead); பின்னும் நகோமி அவளைப் பார்த்து: அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின்முறையானும் நம்மை மீட்டுக்கொள்ள உரிமையுடையவனாகவும் இருக் கிறான் என்றாள் (KJV பக்கக்குறிப்பு பார்க்கவும் - one that hath right to redeem)."இங்கே மரித்தவர்கள் என்பது பெயர் சபையில் விழுங்கப்பட்ட கிரீடத்தை இழந்த தலைவர் களையும், பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட தலை வர்களையும் (நிஜ நிறைவேறுதலான எலிமெலேக்கு, மக்லோன் மற்றும் கிலியோன்) குறிக்கிறது. உயிரோடிருக் கிறவர்கள் என்பது சத்தியத்திலுள்ள கிரீடத்தை இழந்த வர்களையும் (நகோமி), வாலிபரான பாத்திரவான்களை

யும் (ரூத்) குறிக்கிறது. போவாஸ் உயிரோடிருக்கிறவர் களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்வதால் அவர் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நகோமி வாழ்த்துவது என்பது, இந்த இரு வகுப்பாருக்கும் நமது கர்த்தர் செய்த தயவுகளின் நிமித்தம் அவருடைய ஊழியத்தில் அவருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று கிரீடத்தை இழந்த வர்கள் விரும்புவதை அடையாளப்படுத்துகிறது.

52. போவாஸ் அவர்களை மீட்டுக்கொள்ள உரிமையுடையவராக இருக்கிறார் என்று நகோமி அறிவிப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் ஒரு தனி வகுப்பாராக இருக்கிறார்கள் என்பதை அங்கீகரித்து, அவர்களை ஏற்றுக்கொண்டு, தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, அவர்களை உபயோகிக்கும் உரிமையுள்ளவர் நமது கர்த்தர் ஆவார் என்று கிரீடத்தை இழந்தவர்கள் வாலிபரான பாத்திரவான்களுக்குப் போதிப்பதை அடையாளப்படுத்துகிறது.

53. ரூத் 2:21 <u>பின்னும் மோவாபிய ஸ்திரீயான ரூத்: அவர் என்னை நோக்கி, என் அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும், நீ என் வேலைக்காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார் என்றாள்.</u> அறுவடையின் முடிவுவரை ரூத் போவாஸின் வேலைக்காரர்களோடே கூடவே இருந்து விழுகதிர் பொறுக்கவேண்டும் என்று அவர் அவளிடம் சொன்னதாக மோவாபிய ஸ்திரீயான ரூத் நகோமியிடம் சொல்வது என்பது, சுவிசேஷ யுக அறுவடையின் முடிவுவரை விழுகதிர்களைப் பொறுக் கும் வேலையில் ஈடுபட யெஷுஆ வாலிபரான பாத்திரவான்களை அழைத்ததாக அவர்கள் வார்த்தையின் மூலமும், செயலின் மூலமும் கிரீடத்தை இழந்தவர் களுக்குச் சொல்வதை அடையாளப்படுத்துகிறது. விழு கதிர்களைப் பொறுக்குவது என்ற அம்சத்தில் அறுவடை *1916*-ல் முடிவுக்கு வந்தது.

54. ரூத் 2:22 <u>அப்பொழுது நகோமி தன் மரு மகளாகிய ரூத்தைப் பார்த்து: என் மகளே, வேறொரு வயலிலே மனுஷர் உன்னை எதிர்க்காதபடிக்கு நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது என்றாள்.</u> ரூத் போவாஸின் வேலைக்காரிகளோடே போகிறது அவளுக்கு நல்லது என்றும், வேறொரு வயலிலே மற்றவர் களோடு விழுகதிர் பொறுக்குவது அவளுக்குத் தீமையா னது என்றும் நகோமி ரூத்துக்குச் சொல்வது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்தும்: வாலிபரான பாத்திர வான்கள் கர்த்தருடைய அறுவடை வயலில் விசுவாச உண்மைத்துவமுள்ள பிரதிஷ்டை செய்தவர்களுடனே கூட இருப்பது அவர்களுக்கு நலமானதாகும் என்றும், கர்த்தருடைய அறுவடையில் விழுகதிர்களைப் பொறுக் கும் வேலையில் தவிர மற்ற வேலைகளில் ஈடுபட மற்றவர்கள் அவர்களை வஞ்சிக்க இடங்கொடுக்கக் கூடாது என்றும் கிரீடத்தை இழந்தவர்கள் வார்த்தை யினாலும், செயலினாலும் வாலிபரான பாத்திரவான் களை உற்சாகப்படுத்தினார்கள். ஏனென்றால் அவர்கள் அவ்வாறு இடங்கொடுத்தால் அவர்கள் கர்த்தருடைய தயவை இழப்பார்கள்.

55. ரூத் 2:23 <u>அப்படியே கோதுமை அறுப்பும் வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர் பொறுக்கும்படிக்கு, போவாசுடைய வேலைக்காரி களோடே கூடியிருந்து, தன் மாமியினிடத்தில் தங்கினாள்.</u> இவ்வசனத்தில் வாற்கோதுமை அறுப்பு, கோதுமை அறுப்புக்கு முன்பு குறிப்பிடப் பட்டிருக்கவேண்டும் (KJV பார்க்கவும்). நகோமி கொடுத்த ஆலோசனையை ரூத் பின்பற்றுவது என்பது, கிரீடத்தை இழந்தவர்கள் கொடுத்த இந்த ஆலோசனையை வாலிபரான பாத்திர வான்கள் பின்பற்றுவதை அடையாளப்படுத்துகிறது. வாற்கோதுமை அறுப்பு தீருமட்டும் அவள் கதிர் பொறுக்குவது என்பது, *1881*-ம் வருடத்திலிருந்து பிப்ர வரி *1908* வரையுள்ள காலத்தில் வாலிபரான பாத்திர வான்கள் விழுகதிர் பொறுக்கும் வேலையில் ஈடுபடு வதை அடையாளப்படுத்துகிறது. பிப்ரவரி *1908*-ல் நிஜ நிறைவேறுதலான வாற்கோதுமை அறுவடை முடிவுக்கு வந்தது. இது பதினோராம் மணிவேளையின் தொடக்க மாக இருந்தது. அப்பொழுது நிஜ நிறைவேறுதலான கோதுமை அறுப்பு தொடங்கினது. கோதுமை அறுப்பு தீருமட்டும் அவள் தொடர்ந்து அந்த வேலையில் ஈடுபடுவது என்பது, பிப்ரவரி *1908* முதல் *1916* பஸ்கா காலம் வரை வாலிபரான பாத்திரவான்கள் சிறுமந்தை வகுப்பாரைப் பொறுக்குவதை (சத்தியத்திற்குள் கொண் டுவருவது) அடையாளப்படுத்துகிறது. *1916*-ம் வருடம் பஸ்கா காலத்தில் கடைசி சிறுமந்தை அங்கத்தினர் பொறுக்கப்பட்டார்.

56. இவ்வாறாக ரூத் புத்தகத்தின் 2-ம் அதி காரத்தின் நிஜநிறைவேறுதல் *1881* முதல் *1916* வரையுள்ள விழுகதிர் பொறுக்கப்படும் காலத்தில் நிகழ்ந்தது என்று நம்முடைய ஆய்வு காண்பிக்கிறது. அறுவடை காலம் முழுவதும் ரூத் நகோமியினிடத்தில் தங்கியிருப்பது என் பது, வாலிபரான பாத்திரவான்கள் சுவிசேஷ யுக அறு வடையின் முடிவு வரை கிரீடத்தை இழந்தவர்களோடு இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

டிசம்பர் *1918* முதல் ஜூலை *1919* வரையுள்ள காலத்தில் நடந்த வாலிபரான பாத்திரவான்களின் செயல்பாடுகள் மற்றும் யெஷுஆ அவர்களுக்கு செய்த தயவுகள்

57. ரூத் 3-ம் அதிகாரத்தின் நிஜநிறைவேறு தலானது டிசம்பர் *1918* முதல் ஜூலை *1919* வரையுள்ள காலத்திற்குரியதாக இருக்கிறது. நாம் இப்பொழுது பார்க்கப்போகிற நிஜநிறைவேறுதலின் உண்மைகள் அதை நிரூபிக்கும்.

58. ரூத் 3:1 <u>பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந் திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப் பேனோ?</u> பாஸ்டர் ரஸலின் மரணத்திற்குப் பிறகு சொசைட்டியைக் கைப்பற்றினவர்களும் (Societyites), அவர்களால் வெளியிடப்பட்ட ஏழாம் வால்யூமும் (Vol. VII) பரம அழைப்புக்குள் பிரவேசிப்பதற்கான கதவு *1918* பஸ்கா காலத்தில் மூடப்படும் என்று கூறினார்கள் (உண்மையில் புதிதாக ஆவியினால் ஜெநிப்பிக்கப் படுவதைப் பொறுத்தவரை அது *1914*-ம் வருடம் செப்டம்பர் *16* அன்று மூடப்பட்டது, ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட விசுவாச உண்மைத்துவமுள்ளவர் களைப் பொறுக்கும் வேலை (gleaning - விழுகதிர் பொறுக்குதல்) *1916* பஸ்கா காலம் வரை தொடர்ந்தது). சொசைட்டியை ஆதரிப்பவர்கள் கொண்டிருந்த இந்த கருத்தினால், அதற்குப் பிறகு புதிதாகப் பிரதிஷ்டை செய்பவர்கள் "நவீன பாத்திரவான்கள்" (Modern Worthies) என்ற வகுப்பை உருவாக்குவார்கள் என்று சரியாக முடிவு செய்தார்கள் (அதற்குரிய சரியான சொல்லர்த்தமான வேதாகம வார்த்தை வாலிபரான பாத்திரவான்கள் – Youthful Worthies - என்பதாகும்). இந்த வகுப்பாரை ஆதாயப்படுத்திக்கொள்வது சொசைட்டியைச் சேர்ந்தவர்

களின் ஊழிய சிலாக்கியங்களில் ஒன்றாக இருந்தது. 1918-ம் வருடத்தில் வெளியிடப்பட்ட வாட்ச் டவர் பத்திரிகையிலும் (Z '18, 355-357) அவர்கள் இந்த கருத்துக்களை தெரிவித்தார்கள். கிரீடத்தை இழந்தவர்களில் நல்லவர்கள் (good crown-losers) டவர் பத்திரிகையிலும், அவர்களுடைய ஆய்வுகளிலும், உரையாடல்களிலும் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்கள் [கிரீடத்தை இழந்தவர்களில் தீய தலைவர்கள் (bad leaders of crown-losers) அக்காலத்தில் சிறையில் இருந்தார்கள்]. கிரீடத்தை இழந்தவர்கள் அக்காலத்தில் பொதுவாக இதைச் செய்தார்கள் என்று நாம் அறிவோம். அக்காலத்தில் வாலிபரான பாத்திரவான்கள் ஒரு வகுப்பாராக ஆசீர்வதிக்கப்படுவதிலும், அதற்குப் பிறகு செய்யப்படும் ஊழியத்திலும் முன்நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டியதாக இருந்தது என்பதை இது அர்த்தப்படுத்தும். அக்காலத்தில் நடந்த கலந்தாய்வுகளும் அந்த வகுப்பாரை முன்நிலைக்குக் கொண்டு வந்தன. இதுவே ரூத் செழிப்படைய வேண்டும் என்று நகோமி (கிரீடத்தை இழந்தவர்களில் நல்லவர்கள்) ஆர்வமாக விரும்புவதை அவள் ரூத்துக்குத் தெரிவிப்பதின் நிஜநிறைவேறுதலாக இருக்கிறது.

59. ரூத் 3:2 <u>நீ போவாசின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே, அவன் நம்முடைய உறவின் முறையான் அல்லவா? இதோ, அவன் இன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்</u>. போவாஸ் அவர்களை மீட்டுக்கொள்ளக் கூடிய நெருங்கிய உறவினராக இருந்தார் என்று நகோமி ரூத்துக்கு நினைவூட்டுவது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது. அக்காலத்தில் சொசைட்டியின் வேலையைக் கண்காணித்துக்கொண்டிருந்த கிரீடத்தை இழந்தவர்களில் நல்லவர்களும், ஸ்டாண்ட் ஃபாஸ்ட்ஸ் (Standfasts), ஒல்சொனைட்ஸ் (Olsonites) முதலிய வகுப்புகளிலுள்ள கிரீடத்தை இழந்தவர்களில் நல்லவர்களும், கர்த்தராகிய யெஷுவா இப்பொழுது வாலிபரான பாத்திரவான்களை ஒரு தனி வகுப்பாராக அங்கீகரித்து, அவர்களைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு, கனி தரும் விதத்தில் அவர்களை உபயோகிப்பார் என்று வாலிபரான பாத்திரவான்களிடம் சொன்னார்கள்.

60. போவாஸ் அன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றிக்கொண்டிருப்பார் என்று நகோமி ரூத்திடம் சொல்வது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: மேலே குறிப்பிடப்பட்ட டவர் கட்டுரையில் (Z '18, 355-357) வெளிவந்த அறிக்கைகளின் மூலமும், சொசைட்டியர்கள் (Societyites) ஸ்டாண்ட் ஃபாஸ்ட்ஸ் (Standfasts), ஒல்சொனைட்ஸ் (Olsonites) ஆகியவர்களை சேர்ந்த கிரீடத்தை இழந்தவர்கள் கொடுத்த பிரசங்கங்களின் மூலமும் அக்காலத்தில் நம்முடைய கர்த்தர் சோதனைமயமான அனுபவங்களின் மத்தியில் திரள் கூட்டத்தாரோடு (வாற்கோதுமை) செயல்பட்டுக்கொண்டிருந்தார் என்று போதித்தார்கள் (களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்). அக்காலத்தில் திரள் கூட்டத்தாருக்கு வந்த துன்புறுத்தல்கள் இந்த தூற்றுதலின் அனுபவங்களின் ஒரு பகுதியாக இருந்தன.

61. ரூத் 3:3 <u>நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தக் களத்திற்குப் போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு</u>. போவாஸ் வாற்கோதுமை தூற்றுக்கொண்டிருந்த களத்திற்குப் போய், அவருக்கு முன்பாகத் தன்னை அழகுள்ளவளாக நிறுத்தும்படிக்கு, ரூத் குளித்து, எண்ணெய் பூசி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள வேண்டும் என்று நகோமி அவளுக்குச் சொல்வது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: திரள் கூட்டத்தாரைத் தூற்றும் (உலகத்தனத்திலிருந்து பிரித்தெடுக்கும்) சோதனை மயமான சூழ்நிலைகள் நடந்துகொண்டிருக்கையில், வாலிபரான பாத்திரவான்கள் அழகுள்ள [மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, தங்களைச் சுத்திகரித்துக்கொண்டு (குளித்து), மனதிலும் இருதயத்திலும் பரிசுத்த அலங்காரத்துடன் (எண்ணெய் பூசி, வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு)] ஒரு விசேஷித்த வகுப்பாராகத் தங்களைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்த வேண்டும் என்று கிரீடத்தை இழந்தவர்கள் வாலிபரான பாத்திரவான்களுக்கு அறிவுறுத்தினார்கள். அக்காலத்தில் சபை வகுப்பாரைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருந்த சத்தியங்கள் (சபை வகுப்பார் முழுமையடைந்திருப்பது, எலியா மற்றும் எலிசா சேர்ந்து ஈடுபட்ட கடைசி செயல்கள் முதலிய சத்தியங்கள்) நம்முடைய கர்த்தரையும் சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தன (போவாஸ் புசித்துக் குடித்து மகிழ்ச்சியாயிருப்பது). இவைகள் எல்லாம் நிராகரிக்க முடியாத உண்மைகளாக இருக்கின்றன.

62. போவாஸ் புசித்துக் குடித்துத் தீருமட்டும் ரூத் தன் நோக்கத்தை அவருக்குத் தெரிவிப்பதற்காக அவருக்கு எதிர்படாமல் இருக்க வேண்டும் என்று நகோமி ரூத்துக்கு சொல்வது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: கர்த்தர் சபை வகுப்பாரைச் சந்தோஷப்படுத்தும் போதனைகளில் மகிழ்ச்சியுடன் பங்குகொண்டு முடித்து, வாலிபரான பாத்திரவான்கள் தனி வகுப்பாராக அவரால் அங்கீகரிக்கப்பட்டு, அவரோடு இணைக்கப்பட்டு, ஊழியத்தில் அவரால் உபயோகிக்கப்படுவதற்கு அவர்கள் தங்களைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்த விசேஷமாக முயற்சி செய்வதற்குரிய காலம் வந்திருக்கிறது என்று கர்த்தர் தமது போதனைகளின் மூலமும், பரிபாலனங்களின் மூலமும் வெளிப்படுத்தும்வரை, அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று கிரீடத்தை இழந்தவர்கள் வாலிபரான பாத்திரவான்களுக்கு ஆலோசனை கூறினார்கள்.

63. அடையாளத்தில், போவாஸ் இராத்திரியில் களத்திலே வாற்கோதுமை தூற்றுவதை முடித்த பிறகு ரூத் அவரை அணுகுவதற்கு ஏற்ற காலமாக இருந்தது. அது போலவே, நிஜநிறைவேறுதலிலும், யெஷுவா திரள் கூட்டத்தாருக்குச் செய்கிற ஊழியத்திலிருந்து, வாலிபரான பாத்திரவான்களின் ஊழியத்தில் ஈடுபடத் தொடங்கும்போது, நிஜநிறைவேறுதலான ரூத் தன் நோக்கத்திற்காக நிஜநிறைவேறுதலான போவாஸிடம் செல்வதற்கு ஏற்ற காலமாக இருந்தது.

64. ரூத் 3:4,5 <u>அவன் படுத்துக்கொண்டபோது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள்; அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான் என்றாள். அதற்கு அவள்: நீர் எனக்குச் சொன்னபடியெல்லாம் செய்வேன் என்றாள்</u>. ரூத் போவாஸின் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி படுத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டளையானது, கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களின் காரியத்தைக் கையாளும்வரை அவர்கள் மனத்தாழ்மையுடனும், அமைதியாகவும் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும் என்று கிரீடத்தை இழந்தவர்கள் வாலிபரான பாத்திரவான்களுக்கு அறிவுறுத்துவதை அடையாளப்படுத்துகிறது. ரூத் செய்யவேண்டியது இன்னதென்று போவாஸ் அவளுக்குச் சொல்லுவார் என்று நகோமி அவளிடம



சொல்வது என்பது, வாலிபரான பாத்திரவான்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கர்த்தர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிவிப்பார் என்ற உறுதியைக் கிரீடத்தை இழந்தவர்கள் அவர்களுக்குக் கொடுப்பதை அடையாளப் படுத்துகிறது. நகோமி தனக்குச் சொன்ன எல்லா வற்றையும் செய்வதாக ரூத் கொடுத்த வாக்கானது, வாலிபரான பாத்திரவான்களோடு இருந்த கிரீடத்தை இழந்தவர்கள் சொன்ன எல்லாவற்றையும் செய்வதாக அவர்கள் வார்த்தையின் மூலமும் செயலின் மூலமும் கொடுத்த நிச்சயத்தை அடையாளப்படுத்துகிறது.

65. மேலே கொடுக்கப்பட்ட டவர் கட்டுரை யிலும், அது சம்பந்தப்பட்ட ஆய்வுகளிலும், உரையாடல் களிலும், *1918*-ம் வருடத்தின் கடைசி பகுதியில் இது சம்பந்தமாக நடந்த நிகழ்வுகளிலும் மேலே சொல்லப் பட்ட நிஜநிறைவேறுதலான உண்மைகளை நாம் காண் போம். அக்காலத்தில் நிகழ்ந்ததாக நாம் அறிந்திருக்கிற உண்மைகள் மட்டுமல்ல, அந்த கட்டுரையினால் சத்திய ஜனங்களின் மத்தியில் இயல்பாகவே இவ்வித ஆய்வு களும் செயல்களும் நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற உண்மையும் இதை நிரூபிக்கிறது.

66. ரூத் *3:6* அவள் களத்திற்குப்போய், தன் மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள். ரூத்துக்கு கட்டளையிடப்பட்டவைகளை அவள் செய்வது என்பது, மேலே குறிப்பிடப்பட்ட நிஜநிறைவேறுதல்களை வாலிப ரான பாத்திரவான்கள் நிறைவேற்றுவதை அடையாளப் படுத்துகிறது. நாங்கள் கொடுக்கிற இந்த விளக்கம் நிச்சய மாக உண்மையானது என்பதற்கு, *1918*-ம் வருடத்தில் சத்திய ஜனங்களின் மத்தியில் நிகழ்ந்த இந்த சம்பவங் களுக்கு நம்மில் *[*பாஸ்டர் ஜான்ஸன் காலத்தில் இருந்த சகோதரர்கள்*]* பெரும்பான்மையானோர் சாட்சிகளாக இருக்கிறோம்.

67. ரூத் *3:7* போவாஸ் புசித்துக் குடித்து, மகிழ்ச்சியாயிருந்து, ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது அவள்: மெள்ளப் போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர் வையை ஒதுக்கிப் படுத்துக்கொண்டாள். *1918*-ம் வருடம் டிசம்பர் *9*-ம் தேதி அன்று பிரசன்ட் ட்ருத் *(Present Truth)* பத்திரிகையின் முதலாம் வெளியீடும், டிசம்பர் *24*-ம் தேதி அன்று இரண்டாம் வெளியீடும் வந்தன. அவைகளில் எபிப்பெனி *(Epiphany)*, எலியா மற்றும் எலிசா சேர்ந்து ஈடுபட்ட கடைசி செயல்கள் *(The Last Related Acts of Elijah and Elisha)*, லேவியர்களிடமிருந்து ஆசாரியத்துவ ஐக்கி யத்தை விலக்குவது *(Withdrawal of Priestly Fellowship From Levites)*, தீர்க்கதரிசிகள் மற்றும் "தீர்க்கதரிசிகள்" *(Prophets And "Prophets")*, அடையாளங்கள் மற்றும் நிஜநிறை வேறுதல்கள் *(Types and Antitypes)*, ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களின் கூடுகைகள் *(Conventions of Priests and Levites)*, முழுமையாக அமைக்கப்பட்ட சபை *(The Church Completely Organized* - மெராரி மற்றும் கெர்சோன் லேவியர் களின் ஊழியத்தைக் கட்டுப்படுத்தும் ஸ்தாபனங்கள் இருக்கும் என்பதற்கும், ஆசாரியர்களுக்கு அவ்வித ஸ்தாபனங்கள் இருக்கக்கூடாது என்பதற்குமுரிய நிரூ பணம்), நியாயந்தீர்த்தல் *(Judging* - லேவியர்களாக நிரூபிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக), தேவனுடைய ஜனங்கள் மத்தியிலுள்ள சமாதானத்தைப் பாதுகாப்பது *(Defense of Peace Among God's People* - ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களுக்கு இடையில் நடக்கிற பிரிவு சம்பந்தமாக) என்ற பாடங்கள் வெளியிடப்பட்டன. இந்த போதனை கள் எல்லாம், அக்காலத்தில் சிறுமந்தைக்கும், திரள் கூட்டத்தாருக்கும் இடையில் முழுமையாகச் செயல் பட்டுக் கொண்டு வந்த பிரிவு சம்பந்தமாக அவர் களுக்கிடையிலுள்ள பந்தத்திற்குப் பொருந்தும் போத னைகளாக இருந்தன. இந்த போதனைகள் சிறுமந்தை வகுப்பாருக்கு ஒரு பெரிய விருந்தாக இருந்து, மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. இவைகளில் நம்முடைய கர்த்த ரும் பங்கு கொண்டார் *(*வெளி.*3:20)*. போவாஸ் விருந்தில் பங்குகொண்டு *(*புசித்துக் குடித்து*)* மகிழ்ச்சியாயிருப்பது இதை அடையாளப்படுத்துகிறது.

68. போவாஸ் அந்த இரவில் அம்பாரத்து *(*வாற் கோதுமைக் குவியலின்*)* அடியிலே வந்து படுத்துக்கொள் வது என்பது, நம்முடைய கர்த்தர் திரள் கூட்டத்தார் சம்பந்தமாகக் கூடுதலான சத்திய விருந்தைக் கொடுப் பதைக் கொஞ்சக் காலத்திற்கு விட்டுவிட்டதையும், சிறுமந்தையையும் திரள் கூட்டத்தாரையும் பிரிக்கும் சோதனைகளைத் தற்காலிகமாக இலகுவாக்கியதையும் அடையாளப்படுத்துகிறது. ஏனென்றால் பிரசன்ட் ட்ருத் பத்திரிகையின் மூன்றாம் வெளியீடு *1919*-ம் வருடம் பிப்ரவரி *19*-ம் தேதி அன்று வெளிவரும்வரை அவர் களைப் பற்றிய கூடுதலான சத்தியம் எதுவும் கொடுக்கப் படாதிருந்தது. மேலும் "எலியா மற்றும் எலிசா சேர்ந்து ஈடுபட்ட கடைசி செயல்கள்" என்ற கட்டுரையின் மறு பதிப்பு பிப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில் வெளியிடப் பட்டிருந்தாலும், ஜூலை மாதம் வரை அது சொசைட்டி யைட்ஸ் *(Societyites)* மத்தியில் விநியோகிக்கப்படா திருந்தது.

69. ரூத் மெள்ளப்போய், போவாஸ் கால்களின் மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக் கொள்வது என்பது, மேலே கொடுக்கப்பட்ட போதனை களை , வாலிபரான பாத்திரவான்கள் பெற்றுக்கொண்டு, அவைகளுக்கு இணக்கமாக, அமைதியாகவும், எவ்விதப் பதட்டமோ அல்லது பகட்டோ இல்லாமலும், தங்கள் இருதயங்களில் ரகசியமாகவும், மனத்தாழ்மையுடனும் தங்களையும், தங்களுடைய காரியத்தையும் கர்த்தரிடம் கொண்டுவந்து, அவருடைய தீர்ப்புக்காக அமைதியாகக் காத்திருந்ததை அடையாளப்படுத்துகிறது.

70. ரூத் *3:8* பாதிராத்திரியிலே, அந்த மனுஷன் அருண்டு, திரும்பி, ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையில் படுத்திருக்கிறதைக் கண்டு, ... பாதித் தூக்கத்தில் விழிப் பவர்கள் எப்பொழுதுமே செய்வதைப் போல் போவாஸ் நடுங்கினார் *(*அருண்டு - *tremble)*. இந்த விஷயத்தில் கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களைத் தமது சித்தத்தின் படி உபயோகிக்கும்படிக்கு அவர்கள் தங்களைக் கர்த்த ருக்கு முழுமையாக ஒப்படைத்து அமர்ந்திருந்தபோது, அவர்களை நோக்கி நமது கர்த்தர் செய்த முதன்முதலான அசைவுகளை இது அடையாளப்படுத்துகிறது.

71. போவாஸ் திரும்பி ரூத்தை பார்ப்பது என்

பது, ஒரு தனிப்பட்ட வகுப்பாராக வாலிபரான பாத்திர வான்களுக்கு ஊழியம் செய்வதற்குக் கர்த்தர் முதலில் தமது கவனத்தை அவர்களிடம் திருப்புவதை அடை யாளப்படுத்துகிறது. 1919 -ம் வருடம் பிப்ரவரி 17 அன்று வெளிவந்த பிரசன்ட் ட்ருத் பத்திரிகையின் மூன்றாம் வெளியீட்டில் வந்த வாலிபரான பாத்திரவான்களைப் பற்றிய கட்டுரையைத் தயார் செய்ய அதின் எழுத்தாள ரைத் (பாஸ்டர் ஜான்சன்) தூண்டுவதின் மூலம் இது நிகழ்ந்தது.

72. ரூத் 3:9 நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள். "நீ யார்?" என்று போவாஸ் ரூத்திடம் கேட்பது என்பது, அந்த கட்டுரையில் வாலிப ரான பாத்திரவான்களின் பண்பைக் குறித்தும், உண்மை யான நிலையைக் குறித்தும் அவர்களுக்கு முன்பாக நமது கர்த்தர் கேள்வியை எழுப்புவதை அடையாளப்படுத்து கிறது [PT. 1919, p. 34-36 -ல் முதல் முறையாக வெளியிடப் பட்டது; பின்பு PT 1920, p. 51-53; PT 1924, p.34-37; PT 1930, p.131-133 ஆகியவைகளில் கூடுதலான சில கருத்துகளுடன் மறுபடியும் அச்சடிக்கப்பட்டது; முந்திய பத்திரிகை களைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்காக அவைகளை மறுபடியும் அச்சடித்தோம்/.

73. ரூத் கொடுத்த பதிலானது, அந்த கட்டுரை களின் பகுதிகளை வாலிபரான பாத்திரவான்கள் படித்த போது, தாங்கள் அந்த வகுப்பைச் சேர்ந்த கர்த்தருடைய ஊழியக்காரர்கள் என்று அங்கீகரிப்பதை அடையாளப் படுத்துகிறது. போவாஸ் ரூத்தின் நெருங்கிய உறவினராக அவளை மீட்டுக்கொள்ளக் கூடியவராக இருப்பதை அங்கீகரிக்கும் விதத்தில், தன் போர்வையை அவள் மேல் விரிக்கும்படி அவள் செய்த வேண்டுகோள் பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: அந்த கட்டுரை யைப் படித்து, காரியங்களைப் புரிந்துகொண்ட வாலிப ரான பாத்திரவான்கள், கர்த்தராகிய யெஷுவா அவர்களை அந்த வகுப்பைச் சேர்ந்த ஊழியக்காரர்களாக அங்கீ கரித்து, கர்த்தருடைய ஊழியத்தில் அவர்கள் கனி கொடுப் பவர்களாக இருக்கும்படிக்கு, அவர்களைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் அவரிடம் மன்றாடினார்கள்.

74. ரூத் 3:10 அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான் களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற் குணம் உத்தமமாயிருக்கிறது. ரூத் வாலிபர்களின் பிறகே போகாமல், விடாமுயற்சியுடன் போவாஸை நாடி, பற்றிக் கொண்டதற்காக அவர் அவளைப் பாராட்டுவது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: உலகத் தில் பாவமும், சுயநலமும் மேலோங்கியிருக்கையில், அவைகளில் ஈடுபடுகிற சிறியவர்களையோ, பெரியவர் களையோ (தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர் கள்) வாலிபரான பாத்திரவான்கள் பின்பற்றாமல், கர்த்த ரைப் பற்றிக்கொண்டு, விசுவாச உண்மைத்துவத்துடன் அவருக்கு ஊழியம் செய்வதில் அவர்கள் வெளிப்படுத் தின விடாமுயற்சியின் ஆவியை நமது கர்த்தர் அந்த கட்டுரையின் பகுதிகளின் மூலம் பாராட்டினார் (PT. 1919, p. 36, 6; PT 1920, p.53, 7; PT 1924, p. 37, 2; PT 1930, 133, 7).

75. ரூத் 3:11 இப்போதும் மகளே, நீ பயப் படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். போவாஸ் ரூத்தை உற்சாகப்படுத்துவது (மகளே, நீ பயப்படாதே) என்பது, அந்த முழு கட்டுரையின் மூலம் நமது கர்த்தர் வாலிபரான பாத்திர வான்களை உற்சாகப்படுத்தினதை அடையாளப்படுத்து கிறது. பொதுவாக எல்லாராலும் அறியப்பட்ட ரூத்தின் நற்குணத்தின் நிமித்தம், அவள் செய்த வேண்டுகோள் களை நிறைவேற்ற போவாஸ் வாக்களிப்பது என்பது, பொதுவாக எல்லாரும் அறிந்ததைப் போல், வாலிபரான பாத்திரவான்கள் பிரதிஷ்டையில் வெளிப்படுத்தின உண்மைத்துவத்தின் நிமித்தம், அவர்களுக்கு இக்காலத் தில் கிடைக்கும் வெகுமதிகள் மற்றும் சிலாக்கியங்களை நமது கர்த்தர் அந்த கட்டுரையில் விவரிப்பதை அடை யாளப்படுத்துகிறது (PT 1919, p.36, 1, 2; PT 1920, p.53, 1, 2; PT 1924, p.36, 3, 4; PT 1930, p.133, 1, 2.)

76. ரூத் 3:12 நான் சுதந்தரவாளி என்பது மெய் தான்; ஆனாலும் என்னிலும் கிட்டின சுதந்தரவாளி ஒரு வன் இருக்கிறான். போவாஸ் ரூத்தை மீட்டுக்கொள்ளக் கூடியவராக இருந்தாலும், அவரைவிட கிட்டின மற்றொ ருவர் இருப்பதை அவர் குறிப்பிடுவது பின்வரும் காரி யத்தை அடையாளப்படுத்துகிறது: நம்முடைய கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களை அங்கீகரிக்கிற நெருங் கின உறவினராக இருந்தாலும், அவரை விட இன்னும் நெருங்கிய உறவினர் அவர்களுக்கு இருப்பதாக நமது கர்த்தர் அவர்களுக்கு உறுதியளித்தார். அதாவது சொசைட்டியின் பிரதிநிதிகளாக இருந்த சில திரள் கூட்ட தலைவர்களும், நிர்வாகக் குழு அங்கத்தினர்களும் (Director), பதிப்பாசிரியர்களும் (Editors) வாலிபரான பாத்திரவான்களுக்கு மிகவும் நெருங்கின உறவினர்களாக இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் லேவியர்களாக இருப் பதாலும், வாலிபரான பாத்திரவான்களும் லேவியர்களாக இருப்பதாலும், உலகத்தின் பிரதான ஆசாரியரின் தலையை (யெஷுவா கிறிஸ்து) விட அவர்கள் வாலிபரான பாத்திரவான்களுக்கு நெருங்கிய வகுப்பாராக இருந்தார் கள் என்று நமது கர்த்தர் அவர்களுக்கு உறுதியளித்தார் (PT 1919, p.35, 8 [கடைசி வாக்கியம்]; PT 1920, p.52, 5; PT 1924, p.36, 2; PT 1930, p.132, 7; முன்பு குறிப்பிடப்பட்ட கட்டுரைகளிலும் இதை நாம் காண்கிறோம்).

77. ரூத் 3:13 இராத்திரிக்குத் தங்கியிரு; நாளைக்கு அவன் உன்னைச் சுதந்தரமுறையாய் விவாகம் பண்ணச் சம்மதித்தால் நல்லது, அவன் விவாகம் பண்ணட்டும்; அவன் உன்னை விவாகம்பண்ண மன தில்லாதிருந்தானேயாகில், நான் உன்னைச் சுதந்தரமுறை யாய் விவாகம்பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன்; விடியற்கால மட்டும் படுத்துக்கொண்டிரு என்றான். ரூத்தின் நெருங் கிய உறவினர் அவளை அங்கீகரித்து, அவளைத் கனி கொடுக்க வைக்கும்படிக்கு அவளோடு பந்தத்திற்குள் இணைந்துகொள்வாரா என்று தீர்மானிக்கப்படும்வரை அவள் காத்திருக்க வேண்டும் என்று போவாஸ் அவளுக் குக் கட்டளையிடுவது பின்வரும் காரியத்தை அடை யாளப்படுத்துகிறது: 1919-ம் வருடம் மே மாத பிரசன்ட் ட்ருத் பத்திரிகையில் ரூத் வகுப்பாரின் நெருங்கிய உறவினருக்கு அறிவுறுத்தும் சில கட்டுரைகள் வெளி யிடப்பட்டிருந்தன. இந்த பத்திரிகை பிப்ரவரி மாதத் திலேயே அச்சடிக்கப்பட்டிருந்தாலும், சில தாமதங்கள் உண்டானதால், ஜூலை மாதத்தில் முதல் முறையாக விநியோகிக்கப்பட்டது (சொசைட்டியின் தலைவர்களாக இருந்த நிர்வாகக் குழு அங்கத்தினர்களும் பதிப்பா சிரியர்களும் சிறையில் இருந்ததாலும், சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பிறகு J.F ரூதர்ஃபோர்டின் உடல் நலக்குறைவினாலும் இந்த தாமதம் ஏற்பட்டது). அதனால்

சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் நிஜநிறைவேறுதலான உறவின ராகச் செயல்படுவதற்கு (அதாவது வாலிபரான பாத்திர வான்களை ஒரு வகுப்பாராக ஏற்றுக்கொண்டு, அவர் களுக்குத் தேவையான ஊழியத்தைச் செய்வதற்கு) சந்தர்ப்பம் அளிக்கப்படுவதற்குக் காலதாமதம் ஆயிற்று. கர்த்தருடைய பரிபாலனத்தினால் நடந்த இந்த தாமதத் தின் மூலம் அவர் வாலிபரான பாத்திரவான்களைக் காத் திருக்கக் கட்டளையிட்டார்.

78. ரூத்தின் நெருங்கிய உறவினர் அவளைக் கைவிட்டால், அவனுடைய பொறுப்பை தான் நிறை வேற்றுவதாகப் போவாஸ் வாக்களித்தார். மற்றவர்கள் வாலிபரான பாத்திரவான்களைக் கைவிட்டாலும், நமது கர்த்தர் அவர்களுக்கு ஆதரவாக நிற்பதாக அவர் அவர்களுக்கு உறுதியளிப்பதை இது அடையாளப்படுத்து கிறது. வாலிபரான பாத்திரவான்கள் நிஜநிறைவேறுத லான எலிசா வகுப்பாரின் ஒரு பாகமாக [திரள் கூட்டத் தாருக்கு அடுத்த நிலையில் அவர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக] இருப்பதைக் கர்த்தராகிய யெஷூஆ அங்கீகரித்தார் என்பதில் அவர் அவர்களுக்குக் கொடுத்த இந்த உறுதி அர்த்தப்படுத்தப்படுகிறது. கர்த்த ருடைய பரிபாலனத்தினால் வெளியிடப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரைகள் இதை நிரூபிக்கின்றன. விடியற்காலமட்டும் படுத்துக்கொள்ள போவாஸ் ரூத் துக்குச் சொல்வது, கர்த்தர் வாலிபரான பாத்திரவான் களுக்காகச் செயல்படும் காலம் வரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று அவர்களிடம் கோருவதை அடையாளப்படுத்துகிறது.

79. ரூத் 3:14 <u>அவள் விடியற்காலமட்டும் அவன் பாதத்தண்டையில் படுத்திருந்து, களத்திலே ஒரு ஸ்திரீ வந்ததாக ஒருவருக்கும் தெரிவிக்கவேண்டாம் என்று அவன் சொல்லியிருந்தபடியால், ஒருவர் முகம் ஒருவருக் குத் தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தாள்.</u> அடை யாளத்திலும், நிஜநிறைவேறுதலிலும் போவாஸின் கட்ட ளைக்கு ரூத் கீழ்ப்படிந்தாள் என்று வசனம் 14-ன் முதல் வாக்கியத்தொடர் காண்பிக்கிறது. ரூத் ரகசியமாகச் செயல்படுவதும், ரகசியமாகச் செயல்பட போவாஸ் அவளுக்கு அறிவுறுத்துவதும், இந்த செயல்பாடுகளில் யெஷூஆவும், வாலிபரான பாத்திரவான்களும் ரகசிய மாகச் செயல்படுவதை அடையாளப்படுத்துகிறது. மற்ற வர்கள் அவளைக் கண்டுகொள்ளாதபடிக்கு ரூத் இரவிலே அவ்விடத்தை விட்டு செல்வது என்பதும் அதே காரியத்தை அடையாளப்படுத்துகிறது.

80. ரூத் 3:15 <u>அவன் அவளை நோக்கி: நீ போர்த்துக்கொண்டிருக்கிற போர்வையை விரித்துப்பிடி என்றான்; அவள் அதைப் பிடித்தபோது, அவன் அதிலே ஆறுபடி வாற்கோதுமையை அளந்துபோட்டு, அவள்மேல் தூக்கிவிட்டான். அவள் பட்டணத்திற்குப் புறப்பட்டு வந்தான்</u> (அவள் ... வந்தாள் என்று இருக்க வேண்டும் KJV பார்க்கவும்). போவாஸ் ரூத்துக்கு அளிக்கப்போகிற வாற்கோதுமையை வாங்கிக்கொள்ள ஆயத்தமாக இருக் கும்படிக்கு தன் போர்வையை விரிக்க போவாஸ் அவளுக்குக் கொடுத்த கட்டளையானது, வாலிபரான பாத்திரவான்களின் அர்ப்பணிப்பின் கனிகளாகக் கிரீடத்தை இழந்தவர்களை ஆதாயப்படுத்திக்கொள்வதில் (பெயர் சபையிலிருக்கும் கிரீடத்தை இழந்தவர்களை அறுவடை சத்தியத்திற்குள் கொண்டுவரும்படி) கனி கொடுக்க தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள நமது கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த கட்டளையை அடை யாளப்படுத்துகிறது. முன்பே குறிப்பிட்ட இரண்டு கட்டுரைகளிலும், PT 1919, p.36, 4; PT 1920, p.53, 5; PT 1924,p. 36, 7; PT 1930, p.133, 5 ஆகிய குறிப்புகளிலும் இது அர்த்தப்படுத்தப்படுகிறது. போவாஸின் கட்டளைக்கு ரூத் இணங்குவது, நமது கர்த்தரின் கட்டளைக்கு வாலிப ரான பாத்திரவான்கள் இணங்கியதைக் காண்பிக்கிறது.

81. போவாஸ் அவளுக்கு ஆறுபடி வாற்கோது மையை அளந்துபோடுவது என்பது, வாலிபரான பாத்திர வான்கள் செய்த ஊழியத்தின் விளைவாக நமது கர்த்தர் அவர்களுக்கு முழுமையடையாத எண்ணிக்கையில் கிரீடத்தை இழந்தவர்களைக் கொடுப்பதை அடையாளப் படுத்துகிறது. ரூத் அதைப் பட்டணத்திற்கு கொண்டு வருவது என்பது, தாங்கள் ஆதாயப்படுத்திக்கொண்ட கிரீடத்தை இழந்தவர்களை வாலிபரான பாத்திரவான்கள் சத்திய ஜனங்களிடத்திற்குள் கொண்டுவருவதை அடை யாளப்படுத்துகிறது. இந்த வேலை 1919-ம் வருடம் மார்ச்சிலிருந்து ஜூலை வரை செய்யப்பட்டது.

82. ரூத் 3:16 <u>அவள் தன் மாமியினிடத்தில் வந்தபோது, அவள்: என் மகளே, உன் செய்தி என்ன என்று கேட்டாள்; அப்பொழுது அவள்: அந்த மனுஷன் தனக்குச் செய்ததையெல்லாம் அவளுக்கு விவரித்தாள்.</u> ரூத் நகோமியிடம் வருவது என்பது, இந்த காலத்தில் இந்த வாலிபரான பாத்திரவான்கள் அவர்களோடு இருந்த கிரீடத்தை இழந்தவர்களின் விசேஷித்த கவனத்திற்கு வருவதை அடையாளப்படுத்துகிறது. "உன் செய்தி என்ன?" ("நீ யார்?" - KJV பார்க்கவும்) என்று நகோமி கேட்ட கேள்வியானது, தாங்கள் வாலிபரான பாத்திர வான்களா இல்லையா என்பதை அந்த வகுப்பார் கண்டு கொண்டார்களா என்று அவர்களோடு இருந்த கிரீடத்தை இழந்தவர்கள் அவர்களிடம் கேட்பதை அடையாளப் படுத்துகிறது. போவாஸ் தனக்குச் சொன்னதை ரூத் நகோமியிடம் சொல்வது என்பது, 1919-ம் வருடம் பிப்ரவரி 17-ம் தேதி அன்று வெளியிடப்பட்ட பிரசன்ட் ட்ருத் பத்திரிகையில் வாலிபரான பாத்திரவான்களைக் குறித்து வந்த சத்தியங்களின் மூலம் கர்த்தர் அவர் களுக்குச் சொன்ன காரியங்களை வாலிபரான பாத்திர வான்கள் அவர்களோடு இருந்த கிரீடத்தை இழந்தவர் களிடம் சொன்னதை அடையாளப்படுத்துகிறது.

83. ரூத் 3:17 <u>மேலும் அவர், நீ உன் மாமி யாரண்டைக்கு வெறுமையாய்ப் போகவேண்டாம் என்று சொல்லி, இந்த ஆறுபடி வாற்கோதுமையை எனக்குக் கொடுத்தார் என்றாள்.</u> ரூத் நகோமிக்கு ஆறுபடி வாற் கோதுமையைக் காண்பிப்பது என்பது, வாலிபரான பாத்திரவான்களின் ஊழியத்தின் கனிகளாகக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருந்த இந்த கிரீடத்தை இழந்த வர்களை (பெயர்சபையிலிருந்து வந்தவர்கள்) அவர்கள் நீண்ட காலமாகச் சத்தியத்திலுள்ள கிரீடத்தை இழந்த வர்களுக்கு அறிமுகப்படுத்துவதை அடையாளப்படுத்து கிறது. மேலும் ரூத் தன் மாமியாரண்டைக்கு வெறுமை யாய்ப் போகக் கூடாது என்று போவாஸ் அவளுக்குச் சொல்வதற்கும் இது நிஜநிறைவேறுதலாக இருக்கிறது.

84. ரூத் 3:18 <u>அப்பொழுது அவள்: என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியு மட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாற மாட்டான் என் றாள்.</u> இந்த காரியம் வெற்றிகரமாக முடிவடையும்வரை போவாஸ் விடாமுயற்சியுடன் செயல்படுவார் என்பதற்கு அவருடைய குணாம்சமே உத்தரவாதமாக இருப்பதால், அவருக்காக அமைதியாகக் காத்திருக்க நகோமி ரூத்துக்கு ஆலோசனையாகக் கூறினாள். வாலிபரான பாத்திரவான் களின் காரியம் வெற்றிகரமாக முடிவடையும்வரை நம்

முடைய கர்த்தர் விடாமுயற்சியுடன் செயல்படுவார் என்ப தற்கு அவருடைய குணாம்சமே உத்தரவாதமாக இருப்ப தால், வாலிபரான பாத்திரவான்கள் அமைதியாகவும், விசு வாச உறுதியுடனும் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும் என்று கிரீடத்தை இழந்தவர்கள் அவர்களுக்கு ஆலோச னையாகக் கூறியதை இது அடையாளப்படுத்துகிறது.

ஜூலை 1919 முதல் ஜூலை 1921 வரையுள்ள காலத்தில் யெஷூஆ வாலிபரான பாத்திரவான்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்றுவது

85. ரூத் புத்தகத்தின் 4-ம் அதிகாரத்தின் நிஜ நிறைவேறுதலானது, ஜூலை 1919 முதல் ஜூலை 1921 வரையுள்ள காலத்திற்குரியதாக இருக்கிறது.

86. ரூத் 4:1 போவாஸ் பட்டணவாசலில் போய், உட்கார்ந்து கொண்டிருந்தான்; அப்பொழுது போவாஸ் சொல்லியிருந்த அந்தச் சுதந்தரவாளி அந்த வழியே வந்தான்; அவனை நோக்கி: ஓய், என்று பேர் சொல்லிக் கூப்பிட்டு, இங்கே வந்து சற்று உட்காரும் என்றான்; அவன் வந்து உட்கார்ந்தான். 1919-ம் வருடம் மே மற்றும் ஆகஸ்ட் மாத பிரசன்ட் ட்ருத் (மே மாத பத்திரிகை பிப்ர வரியில் அச்சடிக்கப்பட்டு, ஜூலையில் விநியோகிக்கப் பட்டது) பத்திரிகைகளில் வந்த கட்டுரைகளின் மூலம், போவாஸ் சொன்ன (ரூத் 4;1,2) காரியங்களுக்கு நிஜநிறை வேறுதலான செய்திகளை யெஷூஆ கொடுத்தார். ரூத்.4:1 -ம் வசனத்தில், போவாஸ் பட்டணவாசலில் போய், அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பது என்பது, சத்திய ஜனங்களின் மத்தியில் இந்தக் கட்டுரைகளைப் பரவலாக விநியோகிப்பதற்கு நமது கர்த்தர் ஆயத்தம் செய்து கொண்டிருப்பதைக் குறிக்கிறது.

87. ரூத்தின் நெருங்கிய உறவினர் பட்டண வாச லண்டை வருவது என்பது, சொசைட்டியின் தலைவர் களும், நிர்வாகக் குழு அங்கத்தினரும், பதிப்பாசிரியர் களும் சத்திய ஜனங்களின் மத்தியில் திரும்பச் செயல்படத் தொடங்குவதின் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த நிலைக்கு (பட்டணவாசல்) வருவதை அடையாளப் படுத்துகிறது. அவர்களில் முக்கியமானவர்கள் அதுவரை சிறையில் இருந்து, அதற்குக் கொஞ்சம் காலத்திற்கு முன்பு விடுதலையாக்கப்பட்டிருந்ததால் அக்காலத்தில் திரும்பச் செயல்படத் தொடங்கினார்கள்.

88. அவன் வந்து சற்று உட்கார வேண்டும் என்று போவாஸ் அவனைக் கேட்டுக்கொள்வது என்பது, 1919-ம் வருடம் மே மாதத்திலும் (இந்தப் பத்திரிகை பிப்ரவரியில் அச்சடிக்கப்பட்டு, ஜூலையில் விநியோகிக்கப்பட்டது), ஆகஸ்ட் மாதத்திலும் வெளிவந்த கட்டுரைகளின் மூலம், நமது கர்த்தர் அவைகளிலுள்ள கருத்துக்களை அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதையும், அவர் கள் இப்பொழுது முழு சபைக்கு முன்வந்து, அந்த கருத்துக்களைச் சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவர அவர்களிடம் கேட்டுக்கொள்வதையும் அடையாளப் படுத்துகிறது. நெருங்கிய உறவினன் அதற்கு இணங்கு வது என்பது, சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத் தினரும், பதிப்பாசிரியர்களும் இந்த நிஜநிறைவேறு தலான வேண்டுகோளுக்கு இணங்குவதை அடையாளப் படுத்துகிறது. இந்தக் கட்டுரை மிகவும் பரவலாக விநியோகப்படுத்தப்பட்டதால் (முதல் தொகுப்பில் 30,000 பிரதிகளுக்கு மேலாகவும், இரண்டாம் தொகுப்பில் 20,000 பிரதிகளுக்கு மேலாகவும் சொசைட்டியை ஆதரிப்பவர் களின் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருந்தன) இந்த இரு விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டிருக்க வேண்டும்.

89. ரூத் 4:2,3 அப்பொழுது அவன் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேரை அழைத்து, இங்கே உட்காருங்கள் என்றான்; அவர்களும் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவன் அந்தச் சுதந்தரவாளியை நோக்கி: எலிமெலேக் என்னும் நம்முடைய சகோதரனுக்கு இருந்த வயல்நிலத்தின் பங்கை, மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்த நகோமி விற்கப்போகிறாள். இந்தப் பட் டணவாசலின் காட்சியின் நிஜநிறைவேறுதல் முடி வடைவதற்கு முன்பு, சத்திய ஜனங்களின் மத்தியில் எட்டு லேவி வகுப்புகள் உருவாகியிருந்தன. அந்தப் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேர், இந்த எட்டு லேவி வகுப்புகளில் இந்தச் சத்தியத்திற்கு இணங்குகிற தலைவர் களையும், இந்த லேவி வகுப்புகளிலுள்ள சிறுமந்தை தலைவர்களையும், எபிப்பெனி இயக்கத்திலுள்ள சிறு மந்தை தலைவர்களையும் அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் எல்லாரும் சேர்ந்து தலைவர்களின் பத்து தொகுப்புகளாக இருந்தார்கள்.

90. போவாஸ் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேரை அழைத்து, எலிமெலேக் விட்டுப்போன நகோமியின் வயல்நிலத்தின் பங்கைப் பற்றிய காரியத்தில் சாட்சிகளாக இருந்து, நியாயந்தீர்க்க அவர்களிடம் கேட்பது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப் படுத்துகிறது: நம்முடைய கர்த்தர், மேலே சொல்லப்பட்ட கட்டுரைகளின் மூலம் அந்தப் பத்து வகுப்புகளைச் சேர்ந்த ஒத்துணர்வுள்ள தலைவர்களின் பத்து தொகுப்பு களின் கவனத்தைத் திருப்பி, அவர்களை நியாயந்தீர்ப் பவர்களாக அல்லது சாட்சிகளாக இருக்க அழைப்பதை அடையாளப்படுத்துகிறது. அதாவது, திரள் கூட்டத்தாரின் (நகோமி) காரியங்களைச் சரியாக அமைக்கும்படிக்கு, அவைகளை முன்நிலைக்குக் கொண்டுவரும் விஷயத்தில் அவர்களை நியாயந்தீர்ப்பவர்களாக அல்லது சாட்சி களாக இருக்க அழைத்தார். அந்த மூப்பர்கள் உட்காருவது என்பது, அவர்களுடைய நிஜநிறைவேறுதல்கள் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அந்த விஷயத்தில் செயல்படத் தங்களை ஆயத்தம் செய்துகொள்வதை அடையாளப்படுத்துகிறது.

91. திரள் கூட்டத்தாரை அக்காலத்தில் விசேஷ மாக ஆதாயப்படுத்திக்கொள்ளத்தக்கச் சகோதரர்களாக அங்கீகரிக்கும் சிலாக்கியமும், அவர்களுடைய வேலையை நிர்வகிக்கும் சிலாக்கியமும், அக்காலத்திற் குரியவைகளாக இருந்தன. திரள் கூட்டத்தாருக்குரிய இந்த காரியங்கள் அதற்கு முன்பு தெளிவாகப் புரிந்து கொள்ளப்படாதவைகளாக இருந்தன. இது சம்பந்தமாகப் பலியின் ஊழியம் செய்வதின் மூலம் அந்த சிலாக் கியங்களைப் பெற்றுக்கொள்ளக் (மீட்டுக்கொள்ள) கூடும் என்று நமது கர்த்தர் செப்டம்பர் 1919 பிரசன்ட் ட்ருத் பத்திரிகையில் வெளிவந்த "செயலியக்கியாக இருக்கிற சொசைட்டி" (The Society As Channel) என்ற கட்டுரையின் மூலம் அறிவித்தார். இதுவே எலிமெலேக் கின் வயல்நிலத்தின் பங்கை நகோமி விற்கப்போவதைக் குறித்து அவர்களுடைய நெருங்கிய உறவினரிடம் போவாஸ் சொல்வதின் நிஜநிறைவேறுதலாக இருக்கிறது (PT. 1919, p.161, 1; PT 1925, p.97, 1; PT 1931, p.30, 5).

92. ரூத் 4:4 ஆகையால் நீர் அதை ஊராருக்கு முன்பாகவும், என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும் வாங்கிக்கொள்ளும்படி உமக்கு அறியப்பண்ணவேண்டும் என்றிருந்தேன்; நீர் அதைச் சுதந்தரமுறையாக மீட்டுக்

கொள்ள மனதிருந்தால், மீட்டுக்கொள்ளும்; அதை மீட்டுக்கொள்ள மனதில்லாதிருந்தால், நான் அதை அறியும்படிக்கு எனக்குச் சொல்லும்; உம்மையும் உமக்குப்பின்பு என்னையும் தவிர, அதை மீட்கத்தக்கவன் வேறொருவனும் இல்லை என்றான்; அதற்கு அவன்: நான் அதை மீட்டுக்கொள்ளுகிறேன் என்றான். அந்த நெருங்கிய உறவினருக்கு நிலத்தை வாங்கிக்கொள்வதற்கான வாய்ப்பை கொடுப்பதாக போவாஸ் எல்லாருக்கும் முன்பாக அறிவிப்பது என்பது, மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரையின் மூலம் நம்முடைய கர்த்தர் கொடுத்த அதற்கொத்த அறிக்கையை அடையாளப்படுத்துகிறது. சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினரும், பதிப்பாசிரியர்களும் பின்வரும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அந்தக் கட்டுரை அவர்களை ஊக்குவித்தது: 1) அக்காலத்தில் சிறுமந்தை வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடைந்திருப்பதால், தேவன் இப்பொழுது திரள் கூட்டத்தாருடன் செயல்படுவார் என்பதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும், 2) சொசைட்டியை நிர்வகிக்கும் படிக்கு அவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியத்தைத் திரள் கூட்டத்தாரின் நலனுக்காக விசுவாச உண்மைத்துவத்துடன் உபயோகிக்க வேண்டும், 3) மேலும் இவைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும், விசேஷமாகத் தலைவர்களின் பத்து வகுப்புகளுக்கு முன்பாகவும் செய்ய வேண்டும்.

93. நகோமியை மீட்டுக்கொள்ள முதல் உரிமையுடைய நெருங்கிய உறவினர், தன்னுடைய உரிமையைச் செயல்படுத்துவானா இல்லையா என்று தீர்மானிக்க போவாஸ் அவரிடம் சொல்வது என்பது, நம்முடைய கர்த்தர், மேலே குறிப்பிடப்பட்ட அதே கட்டுரையின் மூலம், பின்வரும் காரியத்தைச் செய்வதை அடையாளப்படுத்துகிறது: சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்ளும் முதல் உரிமையிருந்தது. ஏனென்றால் சொசைட்டியின் கொள்கைகள் மற்றும் போதனைகள் சம்பந்தமாக அதைக் கையாளும் அதிகாரம் நியாயமாக அவர்களுடையதாக இருந்தது (ஆனால் அந்த அங்கத்தினர்களில் ஒருவர் அந்த அதிகாரத்தை அபகரித்ததால், அவர்கள் தங்களுக்குரிய அதிகாரத்தைச் செயல்படுத்தாதிருந்தார்கள்). சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் தங்களுடைய கடமைகளை விசுவாச உண்மைத்துவத்துடன் நிறைவேற்றி, திரள் கூட்டத்தாரின் நன்மைக்காகச் சொசைட்டியின் காரியங்களை நிர்வகிப் பார்களா இல்லையா என்று தீர்மானிக்கக் கர்த்தர் அவர்களை அழைத்தார் (மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரையின் மூலம்).

94. அந்த நெருங்கிய உறவினருக்கு ஏற்கனவே இருந்த உரிமைகளை அவர் உபயோகிக்காவிட்டால், தான் அவைகளைக் கையாளுவதாகப் போவாஸ் அவருக்கு உறுதியளிப்பது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: ஒரு வகுப்பாகத் திரள் கூட்டத்தார் சம்பந்தமாகவும், திரள் கூட்டத்தாருக்குரிய ஊழியம் சம்பந்தமாகவும் தகுந்த விதத்தில் செயல்படும்படிக்குச் சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அவர்கள் உபயோகிக்காவிட்டால், நம்முடைய கர்த்தர் தாமே அந்த வேலைகளைச் செய்வார் என்று அந்த இரு கட்டுரைகளின் மூலம் அவர்களுக்குத் தெரிவித்தார்.

95. இந்த விஷயத்தில் தனக்குரிய பங்கை நிறைவேற்றுவதாக அந்த நெருங்கிய உறவினர் போவாஸிடம் சொல்வது என்பது, மேலே சொல்லப்பட்ட நிஜநிறைவேறுதலான பங்கை நிறைவேற்றுவதாக நிர்வாகக் குழு அங்கத்தினர்களும், பதிப்பாசிரியர்களும் உறுதியாகக் கூறுவதை அடையாளப்படுத்துகிறது. அக்காலத்தில் க்லேடன் வுட்வர்த் (Clayton Woodworth) என்பவர் சொன்னதைப் போல், சிறிய பென்யமீனை ஆதாயப்படுத்திக் கொள்வது அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த வேலை என்று அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

96. ரூத் 4:5 அப்பொழுது போவாஸ்: நீர் நகோமியின் கையிலே அந்த வயல்நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்தரத்தில் அவன் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் கையிலும் வாங்க வேண்டியது என்றான். அந்த நெருங்கிய உறவினர் அந்த வயல்நிலத்தில் நகோமியின் உரிமையுடன் ரூத்தின் உரிமையையும் மீட்டுக்கொள்ள வேண்டியதாக இருக்கும் என்று போவாஸ் அவரிடம் சொல்வது என்பது பின்வரும் காரியங்களை அடையாளப்படுத்துகிறது: அந்த வயல் நிலம் என்பது பொது மக்களை நோக்கிச் சொசைட்டி செய்ய வேண்டிய ஊழியத்தின் செயலெல்லையைக் குறிக்கிறது. அந்த ஊழிய செயலெல்லையில் எலிசாவினால் அடையாளப்படுத்தப்பட்ட இரு வகுப்பாருக்கும் உரிமை இருக்கிறது (அக்காலத்தில் பொது மக்களுக்குத் தேவனுடைய வாயாகச் செயல்படும் உரிமை திரள் கூட்டத்தாருக்கும் வாலிபரான பாத்திரவான்களுக்கும் இருந்தது). பொது மக்களுக்குச் செய்யப்படும் இந்த ஊழியத்திலும், தங்களுடைய சொந்த வகுப்புகளுக்குச் செய்யப்படும் ஊழியத்திலும் திரள் கூட்டத்தாருக்கும், வாலிபரான பாத்திரவான்களுக்கும் உரிமை இருக்கிறது என்று நம்முடைய கர்த்தர் மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரைகளின் மூலமும் PT 1919, p. 175, 1-4; PT 1924, pp.82, 83; PT 1930, p. 74, 3-6 ஆகிய கட்டுரைகளின் மூலமும் அறிவித்தார். எலிசா முதற்பேறானவர்களின் பங்கைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுதல் செய்வது என்பது ("இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" - 2 ராஜா. 2:9), எலிசா இரு வகுப்பார்களை (திரள் கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள்) அடையாளப்படுத்துவதை நிரூபிக்கிறது என்று இந்தக் கட்டுரைகளில் காண்பிக்கப்பட்டது.

97. மரித்தவனாகிய மக்லோனின் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அந்த நெருங்கிய உறவினர் ரூத்தை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று போவாஸ் அவரிடம் சொன்னார் (இது நகோமியை மணம் செய்துகொள்வதைக் குறிக்கிறது என்று JFR தவறாகக் கூறுகிறார். நகோமியின் புருஷன் அவள் மூலமாகப் பிள்ளைகளைப் பெற்றெடுத்திருப்பதால் இந்தத் திருமணம் நகோமிக்குப் பொருந்தாது என்பதில் சந்தேகமில்லை). வாலிபரான பாத்திரவான்களின் காரியத்தில் சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினரும், பதிப்பாசிரியர்களும் பின்வரும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது: வாலிபரான பாத்திரவான்கள் என்ற தனி வகுப்பு இருப்பதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். மேலும் அவர்களோடு இணைந்து, அக்காலத்தில் உருவாக்கப்படக்கூடிய விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களின் ஒரே வகுப்பாகிய வாலிபரான பாத்திரவான்களை உருவாக்க வேண்டும். அவர்கள் மரித்த நிலையிலுள்ள நிஜநிறைவேறுதலான மக்லோனின் இடத்தை எடுத்துக்கொள்வார்கள் (மக்லோன் வகுப்பாரின் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை அவர்கள் இழந்ததால் அவர்கள் மரித்தவர்களாக இருந்தார்கள்).

மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரைகளில் இந்த கருத்து களை நாம் காண்கிறோம்.

98. ரூத் *4:6* அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ள மாட்டேன் என்றான். ரூத்துக்குப் பிறக்கப்போகிற பிள்ளைகள் மக்லோனின் சந்ததியாராகக் கருதப்படு வதால், அந்த வயல்நிலம் அந்த பிள்ளைகளின் சுதந்திர மாக இருக்கும் என்றும், அது தனக்குத் திரும்ப வராது என்றும், மற்றொருவரின் நன்மைக்காகத் தான் செலவு செய்வதாக இருக்கும் என்றும் நன்றாக அறிந்து, இவ்வித மான ஒரு பரிவர்த்தனைக்குள் பிரவேசிப்பதை அந்த நெருங்கிய உறவினர் மறுத்தார். அது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: சொசைட்டியின் தலைமையதிகாரி மற்றும் பிரதான பதிப்பாசிரியரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழு அங்கத்தின ரும், பதிப்பாசிரியர்களும், ஜனவரி *15, 1920*-ம் ஆண்டு டவர் பத்திரிகையில் பாத்திரவான்களைக் குறித்து வந்த கட்டுரையின் மூலம் நிஜநிறைவேறுதலான போவாஸ் முன்வைத்த இந்த ஆலோசனையை மறுத்தார்கள். அந்தக் கட்டுரையில் அவர் வாலிபரான பாத்திரவான்கள் அல்லது வேறெந்த வகையான பரீட்சார்த்தரீதியில் நியாயமாக்கப் பட்ட நபர்கள் இருப்பதையே மறுத்தார். இவ்வாறாக இவ்விதமான ஒரு வகுப்புக்காகவும், அக்காலத்தில் ஆதாயப்படுத்தப்படக் கூடிய ஒரே வகையான விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்தரீதியில் நியாயமாக்கப் பட்டவர்களை உருவாக்குவதற்காகவும் (வாலிபரான பாத்திரவான்கள்) பலியின் ஊழியம் செய்ய சொசைட்டி விரும்பவில்லை. அதற்குச் சுயநலமான ஒரு காரணம் இருந்தது. அது என்னவென்றால், இவ்விதமான ஒரு வகுப்பாருடன் தங்களுடைய வல்லமைகளைப் பங்கிட் டுக்கொள்ள அவர்கள் விரும்பாதிருந்தார்கள் என்பதா கும் (நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு...). அவர்களுடைய அந்தக் கட்டுரை (ஜனவரி *15, 1920*-ம் ஆண்டு டவர் பத்திரிகையில் வந்த கட்டுரை) வெளி யிடப்படுவதற்கு முன்பு பல மாதங்களுக்கு அதிலுள்ள கருத்துகளைக் குறித்துப் பெத்தேலில் *(Bethel)* வாத விவாதங்கள் நடந்தன. *1920* ஜனவரி *3*-ம் தேதி அன்று பிட்ஸ்பர்க் *(Pittsburgh)* என்ற இடத்தில் நடந்த சொசைட்டியின் பங்குதாரரின் கூட்டத்திற்கு *(Shareholders' meeting)* முன்பே அந்தக் கட்டுரை எழுதப்பட்டது.

99. அதை மீட்டுக்கொள்ளும் வாய்ப்பை அந்த நெருங்கிய உறவினர் விட்டுவிட்டு, போவாஸுக்கு அந்த வாய்ப்பை அளிப்பது என்பது, மேலே சொல்லப்பட்ட கட்டுரை மற்றும் அதனோடு தொடர்புடைய சில செயல் களின் மூலம் சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினரும், பதிப்பாசிரியர்களும், தங்களுக்குரிய சிலாக்கியத்தை விட்டுவிடுவதை அடையாளப்படுத்து கிறது. அவர்கள் அவ்வாறு செய்ததால் அந்த சிலாக்கியம் கர்த்தருடையதாக ஆயிற்று.

100. ரூத் *4:7,8* மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரயே லிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரயேலிலே வழங்கின உறுதிப்பாடு. அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சை யைக் கழற்றிப் போட்டான். ஒருவனால் மீட்டுக் கொள்ளப்படக்கூடிய சுதந்தரத்தை மீட்டுக்கொள்ளாமல்



இருப்பது, அல்லது தகப்பன் வழியாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய சொத்தை மற்றொருவனுக்கு விட்டு விடுவது என்பது இஸ்ரயேலில் எப்பொழுதுமே ஒரு தீமையாக இருந்தது. அவ்வாறாகச் செய்கிற ஒருவன், அந்த தீமையின் ஒரு அடையாளமாகத் தன் பாதரட் சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுக்க வேண்டிய தாக இருந்தது. அதனால் அவன் நொண்டி நடக்க வேண்டியதாக இருக்கும். நொண்டி நடப்பது என்பது தவறான நடத்தையை அடையாளப்படுத்தும். இவ்வாறாக இதன் நிஜநிறைவேறுதலை நிறைவேற்ற மறுக்கும் ஒரு நிஜநிறைவேறுதலான இஸ்ரயேலனின் தவறான நடத் தையை அது அடையாளப்படுத்தும்.

101. மேலும் பிள்ளையில்லாமல் மரித்துப்போன தன் சகோதரனின் விதவையை மணம் செய்துகொள்ள தகுதியுள்ளவனாக இருந்தும், ஒருவன் அதை மறுத்தால் அதுவும் இஸ்ரயேலில் ஒரு தீமையாக எண்ணப்பட்டது *(உபா. 25:7-10)*. அது, ஆவிக்குரிய இஸ்ரயேலிலுள்ள ஏதே னும் ஒரு வகுப்பின் தலைவர்கள் விழுந்துபோகும்போது, தகுதியுள்ள மற்றொரு நபர் அவனுடைய இடத்தை எடுத்துக்கொண்டு, நிஜநிறைவேறுதலான பிள்ளைகளை உண்டுபண்ண மறுப்பதை அடையாளப்படுத்தும். இவ்வா றாக, *1)* திரள் கூட்டத்தாரின் தலைமை நிலையிலுள்ள வர்கள் அந்த நிலையை இழக்கும்போது, திறமையுள்ள மற்றவர்கள் அந்த தலைமை பொறுப்பை எடுத்துக் கொண்டு, திரள் கூட்டத்தைச் சேர்ந்த மற்றவர்களை ஆதாயப்படுத்திக்கொண்டு, அபிவிருத்தி செய்வதை மறுக்கும்போதும், *2)* வாலிபரான பாத்திரவான்களின் தலைமை நிலையிலுள்ளவர்கள் அந்த நிலையை இழக் கும்போது, திறமையுள்ள மற்றவர்கள் அந்த தலமை பொறுப்பை எடுத்துக்கொண்டு, வாலிபரான பாத்திர வான்களைச் சேர்ந்த மற்றவர்களை ஆதாயப்படுத்திக் கொண்டு, அபிவிருத்தி செய்வதை மறுக்கும்போதும், *3)* நியாயமாக்கப்பட்டவர்களின் தலைமை நிலையிலுள்ள வர்கள் அந்த நிலையை இழக்கும்போது, திறமையுள்ள மற்றவர்கள் அந்த தலமை பொறுப்பை எடுத்துக் கொண்டு, நியாயமாக்கப்பட்ட மற்றவர்களை ஆதாயப் படுத்திக்கொண்டு, அபிவிருத்தி செய்வதை மறுக்கும் போதும், அல்லது *4)* ஒரு கீழ் நிலை வகுப்பாரின் (எடு. பரிட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்கள்) தலைவர் களாக இருக்கிறவர்கள் அந்த தலைமை நிலையை இழக்கும்போது, ஏதேனும் ஒரு மேல் நிலை வகுப்பைச் சேர்ந்த திறமையுள்ளவர்கள் இதைச் செய்வதை மறுக் கும்போதும் இவ்வாறு செயல்படுகிறார்கள். ஆனால் சிறு மந்தை வகுப்பாரைப் பொருத்தவரை, அவர்களுடைய தலமை பொறுப்பை மற்றொருவர் ஏற்றுக்கொண்டு,

இவ்வாறாக நிஜநிறைவேறுதலான திருமண பந்தத் திற்குள் பிரவேசிப்பது கூடாத காரியம். ஏனென்றால் அவர்களுடைய தலைவராகிய யெஷூஆ ஒருபோதும் மரிப்பதில்லை. ஆகையால் சிறுமந்தை வகுப்பார் அவர் களுடைய தலைவரை ஒருபோதும் இழக்க மாட்டார்கள்.

102. சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தின ரும், பதிப்பாசிரியர்களும் இவ்வாறு செயல்பட்டதினால் தவறு செய்வது மட்டுமல்ல, அந்த செயலின் விளைவாக மற்ற தவறுகளுக்குள் செல்வதற்கும் கர்த்தர் அவர்களை விட்டுவிட்டார். இவ்வாறாக அவர்களுடைய ஆவிக்குரிய நொண்டி நடத்தையைக் கர்த்தர் வெளியரங்கமாக்கினார். ஆகையால் அந்த நெருங்கிய உறவினர் தன் பாதரட்சை யைக் கழற்றிப் போட்டு, அதைப் போவாஸுக்குக் கொடுத்து, அதன் விளைவாக நொண்டி நடப்பது என்பது, சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினரும், பதிப் பாசிரியர்களும் மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரையினால் செய்த தவறை மட்டுமல்ல, ஜனவரி 3-ம் தேதி அன்று பிட்ஸ்பர்க் என்ற இடத்தில் நடந்த சொசைட்டியின் பங்குதாரரின் கூட்டத்தில் அவர்கள் செய்த தீமைகளையும் அடையாளப்படுத்துகிறது. அந்த தீமைகளாவன: ஆண் டுக்கு ஒரு முறை நடக்க வேண்டியதாக இருந்த சொசைட்டியின் உயர் அலுவலர்களின் *(Society's officers)* தேர்தலை, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நடப்பதாக மாற்றினார்கள். மேலும் சொசைட்டியின் பிரமாணங் களின்படி அதின் நிர்வாகக் குழு அங்கத்தினர் மற்றும் பதிப்பாசிரியர் தங்கள் வாழ்நாட்கள் முழுவதும் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி தேர்வு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. அவர்கள் அதையும் மாற்றி, அவர்களுடைய தேர்தலும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நடப்பதாக அமைத்தார்கள். இது மிக மோசமான மாய்மாலமாக இருந்தது. ஏனெனில் நிர்வாகக் குழு அங்கத்தினரும், உயர் அலுவலரும் வருடத்திற்கு ஒரு முறை தேர்வு செய்யப்படுவதைப் பிரமாணங்கள் கண்டிப் பாகக் கோருகின்றன என்று அவர்களே *1917* மற்றும் *1918*-ம் வருடங்களில் கூறியிருந்தார்கள். இது மாய்மாலம் செய்வதாக இருப்பது மட்டுமல்ல, அதிகாரத்தை அபகரிப் பதாகவும், பேராசையாகவும் இருந்தது. இந்த நிஜநிறை வேறுதலான நொண்டி நடத்தை பிற்காலத்தில் நடை முறையிலும், போதனையிலுமுள்ள தப்பறைகளாக வெளிப்பட்டது. இவ்வாறாக இந்த விஷயத்தில் சரியான நடத்தையைச் செயலாற்றும் பொறுப்பு நிஜநிறைவேறு தலான போவாஸிடம் விட்டுவிடப்பட்டது *(பாதரட்சை யைப் போவாஸிடம் விட்டுவிடுவது).*

103. மக்லோனுக்குச் சந்ததியை உருவாக்கும் படிக்கு ரூத்தை மணம் செய்துகொள்ள மறுத்த உறவின ரின் பாதரட்சையை ரூத் கழற்றி, அவருடைய முகத்திலே துப்பினதாக இங்கே பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று அடையாளம் காண்பிக்கிறது *(உபா. 25:9).* இங்கே அவ்வாறு செய்யப் படாததற்குக் காரணம் என்னவென்றால், இங்கே சூழ் நிலைகள் சற்று வேறுபட்டவைகளாக இருந்தன. இந்த முழு பரிவர்த்தனையும் ரூத்தினால் அல்லாமல், போவா ஸால் நடத்தப்பட்டது. இந்த பரிவர்த்தனை நடக்கும் போது ரூத் அங்கே இல்லை. ஆனால் அடையாளத்தில், இவ்விதமான பரிவர்த்தனையில் ஜனங்களின் மூப்பர் களுடன் விதவையும் செயல்பட வேண்டியதாக இருந்தது.

104. ஆனால் ரூத்தின் நெருங்கிய உறவினரின் காரியத்தில், அடையாளத்திலும் நிஜநிறைவேறுதலிலும் பாதரட்சை கழற்றப்பட்டது. மேலும் நிஜநிறைவேறு தலில் அவருடைய முகத்திலே துப்பும் காரியமும் நடந்தது. தேவனுடைய ஜனங்களின் வாயிலிருந்து உண் டாகும் உமிழ்நீர் ஒரு நல்ல காரியமாகும். அவர்களுடைய வாய் என்பது தேவனுடைய வாயாகச் செயல்படுவதற்கு அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்தை *(mouthpieceship for God-* வெளி. *3:16;* யோவா. *9:6, EBC* பார்க்கவும்) அடை யாளப்படுத்துவதால், உமிழ்நீர் என்பது சத்தியத்தை அடையாளப்படுத்த உபயோகிக்கப்படுகிறது. ஒருவனு டைய முகத்திலே துப்புவது என்பது, அவனைக் கண்டித்து, அவமதிக்கும் விதத்தில் வார்த்தைகளை உப யோகிப்பதை அடையாளப்படுத்தும். தேவனுடைய ஜனங் கள் இவ்வாறாக உருவகமாக ஒருவனுடைய முகத்தில் துப்புவது என்பது, அவனைக் கண்டித்து, அவமதிப்பதற் குச் சத்தியத்தை உபயோகிப்பதை அடையாளப்படுத்தும். அக்காலத்தில் நிகழ்ந்த உண்மைகள் காண்பிப்பதைப் போல், சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத் தினரிடமும், பதிப்பாசிரியரிடமும், விசேஷமாக அவர் களுடைய தலைவரிடம் நிஜநிறைவேறுதலான போவாஸ் அவ்வாறு செயல்படுவது மட்டுமல்ல, வாலிபரான பாத்திரவான்களும் இந்த விஷயத்தைப் பற்றிய சத்தி யத்தை புரிந்துகொண்ட பிறகு அவர்களிடம் அவ்வாறே செயல்பட்டார்கள். தேவனுடைய ஜனங்களில் மற்றவர் களும் அதைச் செய்தார்கள். இது இந்த அடையாளத்தில் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்றாலும், அதில் அர்த்தப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பரிவர்த்தனையில் மூப்பருக்கு இருக்கிற பங்கின் மூலம் அது காண் பிக்கப்படுகிறது.

105. ரூத் *4:9* <u>அப்பொழுது போவாஸ் மூப்பரை யும் சகல ஜனங்களையும் நோக்கி: எலிமெலேக்கிற்கு இருந்த எல்லாவற்றையும் கிலியோனுக்கும் மக்லோனுக் கும் இருந்த எல்லாவற்றையும் நகோமியின் கையிலே வாங்கிக்கொண்டேன் என்பதற்கு இன்றையதினம் நீங்கள் சாட்சி.</u> போவாஸ் மூப்பரையும் சகல ஜனங்களையும் அழைத்து, தான் அந்த வயல்நிலத்தை வாங்கிக்கொண்ட தற்குச் சாட்சியாக இருக்க அவர்களிடம் கேட்பது பின் வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: மார்ச் *1920, PT* பத்திரிகையில் வந்த *1)* "மூப்பரான மற்றும் நவீன பாத்திரவான்கள்" என்ற கட்டுரையின் மதிப்பாய்வு *("Worthies, Ancient and Modern," Reviewed), 2)* வாலிபரான பாத்திரவான்கள் *(Youthful Worthies -* இந்த கட்டுரை *E Vol. 4,* அத்தியாயம் *5*-ல் மறுபதிப்பு செய்யப்பட்டது) மற்றும் *3)* பலன் தரும் ஊழியத்தைச் செய்வதற்கு வருகிற சில இடையூறுகள் *(Some Hindrances to Fruitful Service)* என்ற கட்டுரைகளின் மூலம் நம்முடைய கர்த்தர், தலைவர்களின் பத்து தொகுப்புகளையும், எல்லா சகோதரரையும் அழைத்து, திரள் கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திர வான்கள் சம்பந்தப்பட்ட எல்லா உரிமைகளையும் அவர் சொசைட்டியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களிட மிருந்தும், பதிப்பாசிரியரிடமிருந்தும் பறித்துத், தம் முடைய பொறுப்பில் எடுத்துக்கொண்டதற்குச் சாட்சி களாக இருக்க அவர்களிடம் சொன்னார். மேலும் அந்தக் கட்டுரைகளின் மூலம் நிர்வாகக் குழு அங்கத்தினர் மற்றும் பதிப்பாசிரியரின் அக்கிரமத்தையும் வெளியரங் கமாக்கினார். அவர்கள் வெளியிடுகிற டவர் பத்திரிகை களில் அடுத்தடுத்ததாக வருகிற தப்பறைகளும் அவர் களுடைய விழுந்துபோன நிலைக்கு நிரூபணமாக இருக்கின்றன என்பதையும் காண்பித்தார். அவர்களு டைய விழுந்துபோன நிலையின் விளைவாக வந்த தவறான நடைமுறைகளையும் வெளியரங்கமாக்கினார்.

106. ரூத் *4:10* <u>இதுவுமல்லாமல், மரித்தவனுடைய சகோதரருக்குள்ளும், ஊராருக்குள்ளும், அவனுடைய பேர் அற்றுப்போகாமல், மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த, நான் மக்லோனின் மனைவி</u>

யாயிருந்த மோவாபிய ஸ்திரீயான ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன்; அதற்கும் இன்றையதினம் நீங்கள் சாட்சி என்றான். மக்லோனுக்கு ஒரு சந்ததியை உருவாக்குவதின் மூலம், அவருடைய குடும்பத்தின் சுதந்தரம் இஸ்ரயேலிலே இருக்கும்படி அதைக் காப்பதற்குப் போவாஸ் ரூத்தை மீட்டுக்கொண்டதற்குச் சாட்சிகளாக இருக்க போவாஸ் அந்த பத்து பேரை அழைப்பது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: மேலே கடைசியாகக் குறிப்பிடப்பட்ட மூன்று கட்டுரைகளின் மூலமாக, விசேஷமாக முதலாம் கட்டுரையின் மூலமாக, நம்முடைய கர்த்தருக்கு வாலிபரான பாத்திரவான்களோடு இருக்கிற பந்தத்தை அவர் அங்கீகரித்து, அக்காலத்தில் இருக்கக் கூடிய ஒரே வகையான விசுவாச உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்த ரீதியில் நியாயமாகக் கப்பட்டவர்களாகிய வாலிபரான பாத்திரவான்களை எழுப்புவதற்கு இந்த வகுப்பாரைத் தமக்குச் சொந்தமான வர்களாக ஆக்கிக்கொண்டார். அக்காலத்தில் வாலிபரான பாத்திரவான்களின் ஒட்டத்திற்குள் வராத பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்கள் அவர்களுடைய பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை இழந்தார்கள்.

107. ரூத் 4:11 அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி: நாங்கள் சாட்சிதான்; உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரயேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப்போலவும் லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக; நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ் பெற்றிருக்கக்கடவாய். ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் "நாங்கள் சாட்சிதான்" என்று சொல்வது பின்வரும் காரியத்தை அடையாளப் படுத்துகிறது: அவர்களுடைய நிஜநிறைவேறுதல்களாகிய கர்த்தருடைய ஜனங்களும், நல்ல தலைவர்களும், அந்த மூன்று கட்டுரைகளில் நம்முடைய கர்த்தர் வெளிப்படுத்தின சத்தியங்களையும், கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களைத் தமக்குச் சொந்தமாக ஏற்றுக்கொண்டதையும், இன்னும் அதிக எண்ணிக்கையில் வாலிபரான பாத்திரவான்களை அபிவிருத்தி செய்வதற்காக நமது கர்த்தர் அவர்களைத் தம்மோடு இணைத்துக்கொண்டதையும் அங்கீகரித்தார்கள்.

108. மூப்பர்களும், ஜனங்களும் ரூத்துக்கும், போவாஸுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: வாலிபரான பாத்திரவான்கள் தங்களுடைய வகுப்பில் அநேகரை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலம் காலத்திற்குரிய தெய்வீக சத்தியத்தின் கனித்தரும் செயலெல்லையில் நமது கர்த்தர் ஜசுவரியங்களையும், மகிமையையும் அடைய வேண்டும் என்றும் கர்த்தருடைய ஜனங்களும், பத்து வகுப்புகளின் நல்ல தலைவர்களும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

109. ரூத் 4:12 இந்தப் பெண்ணிடத்திலே கர்த்தர் உனக்கு அருளிச்செய்யப்போகிற சந்தானத்தினாலே, உன் வீடு தாமார் யூதாவுக்குப் பெற்ற பேரேசின் வீட்டைப் போல ஆகக்கடவது என்றார்கள். ரூத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிற போவாஸின் வீடு பேரேசின் வீட்டைப்போல் ஆக வேண்டும் என்ற வாழ்த்துதலானது, பேரேசின் வீடு பிரபுக்களின் ஒரு வகுப்பாக இருந்ததைப் போலவே, வாலிபரான பாத்திரவான்களும் பிரபுக்களின் ஒரு வகுப்பாக இருக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்த வாழ்த்துதலை அடையாளப்படுத்துகிறது.

110. ரூத் 4:13 போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான்; அவள் அவனுக்கு மனைவியானாள்; அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது, அவள் கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம்பண்ணினார். போவாஸ் ரூத்தை விவாகம்பண்ணி, அவள் மூலமாக ஓபேத்துக்குத் *(serving -ஊழியம்செய்கிற)* தகப்பனாவது என்பது, நமது கர்த்தர் வாலிபரான பாத்திரவான்களைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு, அவர்கள் மூலம் திரளான எண்ணிக்கையில் புதிய வாலிபரான பாத்திரவான்களை அபிவிருத்தி செய்வதை அடையாளப்படுத்துகிறது. நமது கர்த்தர் நிஜநிறை வேறுதலான ரூத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டதால், ரூத் சபை வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது என்று நாம் புரிந்துகொள்ளக் கூடாது. ஏனென்றால் சுவிசேஷ யுக காலங்களை விவரிக்கிற உன்னதப்பாட்டில், சாலொமோனால் அடையாளப்படுத்தப்பட்ட நம்முடைய கர்த்தருக்கு *60* ராஜஸ்திரீகளும், *80* மறுமனையாட்டிகளும் உருவகமான மனைவிகளாக இருந்தாலும் *(உன்.6:8)*, அவருடைய ஒரே உண்மையான மனைவி உண்மையான சபையாக இருக்கிறாள் *(உன்.6:9)*.

111. ரூத் 4:14 அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவன் பேர் இஸ்ரயேலிலே பிரபலமாகக்கடவது. ஸ்திரீகள் நகோமியை வாழ்த்தி, தகுந்த உறவினரையும், பிள்ளையின் பிறப்பையும் ஏற்படுத்தினதற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிப்பது என்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: கர்த்தருடைய ஜனங்களில் தகுதியுள்ள அனைவரும் இந்த காரியத்தில் ஈடுபட்ட கிரீடத்தை இழந்தவர்களுக்கு நன்மையுண்டாக வேண்டும் என்று வாழ்த்தி, இந்த காரியத்தில் தேவன் செய்த நன்மைகளுக்காகவும், நமது கர்த்தரைத் தகுதியுள்ள உறவினராக ஏற்படுத்தினதற்காகவும் அவரைத் துதித்தார்கள். மேலும் இந்த பரிவர்த்தனையில் கர்த்தர் வகித்த பங்குக்காக அவர் ஆவிக்குரிய இஸ்ரயேலில் கனப்படுத்தப்படுவார் என்றும் கூறினார்கள்.

112. ரூத் 4:15 அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன்; உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். ரூத்துக்கு நகோமியுடன் இருந்த பந்தமானது, நகோமி உண்டாக்கியிருக்கக் கூடிய எந்த பிள்ளைகளோடு இருக்கும் பந்தத்தைக் காட்டிலும் மிக சிறந்ததாக இருப்பதால், அந்த பிள்ளை நகோமியின் முதிர்வயது வரை அவளுக்குத் துணையாகவும், ஆதரவாகவும் இருப்பான் என்று அந்த ஸ்திரீகள் அறிவித்தார்கள். வாலிபரான பாத்திரவான்களுக்கு கிரீடத்தை இழந்த நல்லவர்களோடு இருந்த பந்தத்தினால், அவர்களால் பிற்காலத்தில் ஆதாயப்படுத்தப்படும் வாலிபரான பாத்திரவான்கள் அந்த கிரீடத்தை இழந்தவர்களுக்கு முடிவு பரியந்தம் துணையாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள் என்று கர்த்தருடைய ஜனங்கள் அறிவிப்பதை இது அடையாளப்படுத்துகிறது. ஏனென்றால் இந்த கிரீடத்தை இழந்தவர்கள் அபிவிருத்தி செய்திருக்கக் கூடிய மற்ற எல்லா வகுப்பாரைக் காட்டிலும் ரூத் வகுப்பார் அவர்களுக்கு அதிக சிறந்த வர்களாக இருந்தார்கள்.

113. ரூத் 4:16 நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள். நகோமி அந்தப் பிள்ளையைத் தன் மடியிலே வைத்து, அதை வளர்ப்பது என்பது, இந்த கிரீடத்தை

இழந்தவர்கள் இந்த வாலிபரான பாத்திரவான்களிடம் வெளிப்படுத்தின அன்பையும், அவர்களுக்குச் செய்த ஊழியத்தையும் அடையாளப்படுத்துகிறது.

114. ரூத் 4:17 அயல்வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன். அந்த பிள்ளை நகோமியின் பிள்ளை என்று ஸ்திரீகள் அறிவிப்பதும், அந்த பிள்ளைக்கு ஓபேத் *(serving* -ஊழியம்செய்கிற) என்று பேரிடுவதும் பின்வரும் காரியங்களை அடையாளப்படுத்துகின்றன: புதிதாக ஆதாயப்படுத்தப்படுகிற வாலிபரான பாத்திரவான்கள் கிரீடத்தை இழந்த நல்ல வர்களின் பிள்ளைகளாக இருக்கிறார்கள் என்ற கருத்தையும், அந்த வகுப்பார் நிஜநிறைவேறுதலான ஆசாரியர்களாக அல்லாமல், ஒரு ஊழியக்கார வகுப்பாகிய நிஜ நிறைவேறுதலான லேவியர்களாக இருப்பார்கள் என்ற கருத்தையும் கர்த்தருடைய ஜனங்களின் எல்லா வகுப்பாரும் அறிவிப்பதை அர்த்தப்படுத்தும். இந்த உண்மைகள் எல்லாம் *1920* மற்றும் *1921*-ம் வருடங்களில் நிறைவேற்றப்பட்டன. இந்த வசனங்களுக்குப் பின்பு வருகிற வம்சாவளியானது *(வச.17-22)*, இந்த சரித்திரத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும் அதன் ஒரு பகுதியாக இல்லாததால் அதை மேலும் விளக்காமல் விட்டுவிடுகிறோம்.

115. நாங்கள் *(பாஸ்டர் ஜான்சன்)* மேலே கொடுத்த இந்தச் சுருக்கமான விளக்கமானது, உண்மையாகச் சம்பவித்த நிகழ்வுகளுக்கு ரூத் புத்தகத்தின் சரித்திரத்தின் உண்மையான, இசைவான, பகுத்தறிவுக்கு இணக்கமான மற்றும் இயற்கையான பிரயோகமாக இருப்பதால், இதுவே சத்தியமாக இருக்கிறது. இதற்கு எதிர்மாறாக *1932*-ம் வருடத்தில் *JFR* அவருடைய இயக்கத்திற்கு இந்த சரித்திரத்தை பொருத்திக் கொடுத்த விளக்கம் பொய்யானதாகவும், இணக்கமற்றதாகவும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகவும், வற்புறுத்தி செய்யப்பட்ட ஒரு பிரயோகமாகவும் இருக்கிறது. இங்கே மற்றொரு காரியத்தையும் குறிப்பிட நாங்கள் விரும்புகிறோம்: இந்த நிஜநிறைவேறுதல் முழுமையாக நிறைவேற்றப்பட்ட பல வருடங்களுக்குப் பிறகுதான் நாங்கள் அதைப் புரிந்துகொண்டோம். *3*-ம் மற்றும் *4*-ம் அதிகாரங்களில் போவாஸ் சொன்ன வார்த்தைகளுக்கு நிஜநிறைவேறுதலான கருத்துகளைத் தெரிவிக்க நிஜநிறைவேறுதலான போவாஸ் உபயோகித்த கட்டுரைகளை நாங்கள் எழுதும்போதும் கூட, கர்த்தர் எங்களையும், பிரசன்ட் ட்ருத் பத்திரிகையையும் உபயோகித்திருந்தார் என்றும் நாங்கள் உணரவில்லை. நம்முடைய பாஸ்டர் ரஸலும் பல அடையாளங்களுக்கு நிஜநிறைவேறுதலான செயல்களைச் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டதையும் அவர் உணராதிருந்தார்.

ரூத் சபை வகுப்பாரை அடையாளப்படுத்த முடியாது

116. ரூத் சபை வகுப்பாரை அடையாளப்படுத்துவதாகச் சிலர் தவறாகக் கூறுகிறார்கள். ரூத் சபை வகுப்பாரை அடையாளப்படுத்த முடியாது என்பதற்கு ஏழு தெளிவான காரணங்கள் இருக்கின்றன: *1)* சபை வகுப்பார் உருவகமான கானானுக்கு அந்நியர்கள் அல்ல *(ரூத் ஒரு அந்நிய தேசத்தாளாக இருந்தாள்). 2)* ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகிய சபை வகுப்பார் தேசத்தில் பிறந்தவனால் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். *3)* சபை வகுப்பார் விழுகதிர் பொறுக்கும் வேலையில் ஈடுபடவில்லை. அது திரள் கூட்டத்தாருக்கும் *(எளியவன்)*, வாலிபரான பாத்திரவான்களுக்கும் *(பரதேசி)* மட்டுமே உரிய ஊழியமாக இருக்கிறது *(லேவி. 19:10). 4)* விழுகதிர் பொறுக்கும் ஊழியத்தின் கடைசி கட்டம் *(1914-1916)* துவங்குவதற்கு முன்பே சபை வகுப்பார் முழுமையாகக் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருந்தார்கள். *5)* சபை வகுப்பார் கன்னிகையாக இருந்தார்கள், அதற்கு முன்பு ஒருபோதும் மணம் செய்துகொள்ளாதவர்களாக இருந்தார்கள். *6)* (ரூத் செய்ததுபோல்) புருஷன் மரித்திருப்பதால் சபை வகுப்பார் மணம் செய்துகொள்ள முடியாது. அவர்கள் மகிமையிலுள்ள யெஷூஆவுக்கு நிச்சயிக்கப்பட்டவர்கள். மகிமையிலுள்ள யெஷூஆ ஒருபோதும் மரிக்க முடியாது. *7)* ரூத்தை மணம்செய்துகொள்ள போவாசுக்கு முன்பு நெருங்கிய உறவினனுக்கு உரிமை இருந்ததுபோல், சபை வகுப்பாரை யெஷூஆவுக்கு முன்பு மணம் செய்துகொள்ளும் உரிமை எந்த ஒருவனுக்கும் இல்லை.

****

ஆபிரகாமின் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது

BS# 305, August 1961, pp. 60,61

ஆதி. 22:1-13

1. ஆபிரகாம் "விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களின் தகப்பன்" *(Father of the Faithful)* என்று மிகப் பொருத்தமாக அழைக்கப்படுகிறார். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட அவருடைய வாழ்க்கையின் சரித்திரம் முழுவதும் ஆர்வத்தைத் தூண்டுகிறதாக இருக்கிறது. அவருடைய வாழ்க்கை முழுவதும் உறுதியான விசுவாசம், தேவனிடத்தில் முழுமையான தைரிய உறுதி மற்றும் தெய்வீக வாக்குத்தத்தங்களை முழுமையாகச் சார்ந்திருப்பது ஆகியவை நிறைந்ததாக இருந்தது *(ரோம. 4:12-22)*. ஆனால் ஆதி. *22:1-13* வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்ட இறுதியான பரீட்சை மிகவும் தீவிரமானதாகவும், அந்த நபரின் விசுவாசம் எல்லா தரங்களின்படியும் (தெய்வீக மற்றும் மனுஷீக தரங்கள்) மிக உயர்தரமானதாக இருப்பதை நிரூபிக்கும் ஒன்றாகவும் இருந்தது. ஆபிரகாமுக்குத் தேவனோடு இருந்த பந்தத்தின் வருடங்கள் பெருகுகையில் அவருடைய விசுவாசமும் மென்மேலும் பலப்பட்டது என்பது வெளிப்படையாக இருக்கிறது. நம்முடைய பாடத்தில் பதிவு செய்யப்பட்ட விசுவாசமானது நம்மை வியப்படையச் செய்யும் அளவிற்குப் பெரிதாக இருக்கிறது. சர்வ வல்லமையுடைய தேவனோடு நெருங்கிய பந்தமுடையவனாகவும், அவரோடு ஒத்துணர்வு கொள்கிறவனாகவும், அவரிடத்தில் முழு விசுவாச உறுதி வைக்கிறவனாகவும் இருக்கிற ஒரு நபர் மட்டுமே இவ்விதமான ஒரு பரீட்சையை வெற்றிகரமாகச் சகித்திருக்கக் கூடும். ஆபிரகாம் தன் குமாரனை, தன்னுடைய ஒரே பேறான அன்பின் குமாரனும், வாக்குத்தத்தங்களின் மையமானவருமான ஈசாக்கை எடுத்துக்கொண்டு, அவரை மோரியா மலையின் மேல் தேவனுக்குப் பலியாகச் செலுத்தும்படி கொடுக்கப்பட்ட தெய்வீகக் கட்டளையின் மூலம் அந்தப் பரீட்சை வந்தது.


2. இந்த சூழ்நிலையை மதித்துணருவதற்கு,

ஆபிரகாம் அப்பொழுது 125 வயதுள்ளவராக இருந்தார் என்பதையும், ஈசாக்கு எல்லா ஆசீர்வாதங்களின் வழியாக இருப்பார் என்று தேவன் குறிப்பிட்ட குமாரனாக இருந்தார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். நாம் அதற்கும் மேலாக பின்னோக்கிப் பார்த்து, ஈசாக்கின் பிறப்புக்கு முன்பிருந்த நீண்ட காலத்தையும் நினைவுகூர வேண்டும். ஈசாக்கின் பிறப்புக்கு முன்பு, இஸ்மயேல் தேவனுடைய ஆசீர்வாதங்களின் வழியாக இருக்கக்கூடும் என்று ஆபிரகாம் 14 வருடங்களாக எண்ணிக்கொண்டி ருந்தார். நாம் அதற்கும் மேலாக பின்னோக்கிப் பார்த்து, இஸ்மயேலின் பிறப்புக்கு முன்பிருந்த நீண்ட காலத்தை நினைவுகூர வேண்டும். அப்பொழுது ஆபிரகாம், பரதேசி யாகச் சஞ்சரித்துக்கொண்டு, தேவனுடைய வாக்குத்தத் தத்தின் நிறைவேறுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். காலப்போக்கில் தன் மனைவி மலடியாக இருப்பதையும், இனி பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாது என்பதை யும் உணர்ந்தார். இப்பொழுது, அரை நூற்றாண்டு காலத்திற்கு விசுவாச உறுதியோடு காத்திருந்த பிறகும் கூட, தன் உண்மைத்துவத்தையும், தன் விசுவாசத்தையும் நிரூபிப்பதற்கு இவைகள் எல்லாவற்றையும் பலி செய்ய தேவன் விரும்பியிருக்கக்கூடுமா? ஆம், தேவன் அதையே விரும்பினார்! அந்தக் கட்டளை உண்மையானது என்று அவருக்குத் தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்தது. அது ஒரு கற்பனையாகவோ, மந்திரவாதிகளின் மெல்லிய குரலாகவோ, சொப்பனமாகவோ இருக்கவில்லை.

3. ஆபிரகாமுக்கு ஒத்த குணாம்சமுடைய ஒரு வனுக்குத் தெய்வீகக் கட்டளை என்றால் உடனடியான கீழ்ப்படிதலை அர்த்தப்படுத்தும். "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்." மறு நாள் அதிகாலையிலே அவர் அந்தப் பிரயாணத்திற்காக வும், பலிக்காகவும் உடனடியாக ஆயத்தம் செய்து, தன் குமாரனுடன் புறப்பட்டார். அவருடைய ஊழியக்காரர்கள் கொஞ்சத் தூரத்திற்கு அவர்களோடு சென்றார்கள். பின்பு அவர்களை விட்டுவிட்டு, ஆபிரகாமும் ஈசாக்கும் நெருப் பையும், கட்டைகளையும் எடுத்துக்கொண்டு மோரியா மலையின் மேல் ஏறினார்கள் (அதற்குப் பல நூற்றாண்டு களுக்குப் பிறகு, சாலொமோனின் காலத்தில், அவ் விடத்தில் தேவாலயம் கட்டப்பட்டது). அங்கே அவர்கள் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி னார்கள். அப்பொழுது அந்தத் தகப்பன், தன் உதடுகள் நடுங்கினாலும், தீர்மானமான இருதயத்துடன் தெய்வீகக் கட்டளையைக் குறித்துத் தன் குமாரனுக்குத் தெரிவித் தார். அங்கே ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தார். குமாரன் கொல்லப்படவில்லை என்றாலும், பரலோகத்தின் பார்வையில் அந்தப் பலி முழுமையானதாக இருந்தது. ஏனென்றால் ஏற்ற நேரத்தில் தடுக்கப்படாதிருந்தால் நிச்சயமாக ஆபிரகாம் தன் குமாரனைப் பலி செய்திருப் பார். ஆகையால் அப்போஸ்தலர் விளக்குவதைப் போல், ஆபிரகாம் தன் குமாரனை மரித்தோரிலிருந்து பாவனை யாகத் (உருவகமாக) திரும்பவும் பெற்றுக்கொண்டார் (எபி.11:19).

நிஜநிறைவேறுதல்

4. பண்டைய காலத்தின் இந்த நிகழ்வுகளில் நேரடியாக ஈடுபட்டவர்களின் மேல் அவைகளுக்கு ஒரு தாக்கம் இருந்தாலும், பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப் பட்ட தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்களுக்கு அவை கள் இன்னும் ஆழமான மற்றும் மேன்மையான பொரு ளுடையவைகளாக இருக்கின்றன. ஆபிரகாம் சர்வ



வல்லமையுள்ள தேவனை அடையாளப்படுத்துகிறார். ஈசாக்கு கிறிஸ்து வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார் (முதன்மையான நிலையில் தலையாகிய யெஷூஆவை யும், இரண்டாம் நிலையில் சரீரமாகிய சபையையும்). அதன் நிஜநிறைவேறுதல் இவ்வாறாக இருக்கிறது: பரமபிதா சபை வகுப்பாருக்காகவும், சர்வலோகத்தின் பாவங்களுக்காகவும் தம்முடைய குமாரனை இலவச மாகப் பலிசெய்தார் (1 யோவா.2:2). "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் (குமாரனுக்குள் விசுவாசிக்கிறவன் – *believe into*) எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." அவருக்குள் "சகல ஜாதி களும் ஆசீர்வதிக்கப்படும்படிக்கு" அவரைத் தந்தருளி னார் (யோவா. 3:17, 16; கலா. 3:8, 16).

5. தேவன் செய்த இந்த மாபெரும் பலியினால் அவருடைய குமாரர் நித்தியத்திற்கும் மரித்திருப்பார், அதாவது எவ்வகையான ஜீவனும் இல்லாதவராக இருப் பார் என்பதை அது அர்த்தப்படுத்தாது. மாறாக ஒரு மனிதனாகிய கிறிஸ்து மரித்தார் என்பதையும், அவர் நித்தியத்திற்கும் மரண நிலையிலேயே இருப்பார் என் பதையுமே அது அர்த்தப்படுத்தும். அவர் தமது மாம்சத்தை மட்டுமே "உலகத்தின் ஜீவனுக்காகக்" கொடுத்தார் (யோவா. 6:51). ஆனால் ஒரு புது சிருஷ்டியாக அவர் புதிய நம்பிக்கைகளுக்கும், புதிய இலக்குகளுக்கும், புதிய மேல் நோக்கு ஆசைகளுக்கும், திரைக்கப்பாலுள்ள மகிமை யான ஆவிக்குரிய நிலைகளில் ஜீவனடையும்படிக்கும் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தார்.

6. இவ்வாறாகத் தேவன் தம்முடைய குமாரரின் மனுஷீகத்தை முழு மனுகுலத்தின் ஈடு கிரயமாக அல்லது மீட்கும் கிரயமாகப் பலி செய்த பிறகு (1 தீமோ.2:6), அவரை மரண நிலையிலேயே விட்டுவிடவில்லை. புது சிருஷ்டியாகிய நம்முடைய கர்த்தரைத் தேவன் மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்து எழுப்பினார். முன்பு அவருக்குப் பிதாவோடு இருந்த மகிமையை அடையும் படிக்கு அவரை எழுப்புவது மட்டுமல்ல, அதற்கும் கூடுத லாக, எல்லாத் துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், எல்லா நாமத்துக்

கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாகவும் அவரை எழுப்பினார் (எபே.1:20). இவ்வாறாக ஆபிரகாம் ஈசாக் கைப் பலி செய்வதின் நிஜநிறைவேறுதலையும், ஈசாக்குப் பலிபீடத்திலிருந்து எழுப்பப்படுவதின் நிஜநிறைவேறு தலையும் நாம் காண்கிறோம்.

"நாம் அவருடனேகூடப் பாடுபட்டால்..."

7. இந்த நிஜநிறைவேறுதலில் மேலும் ஒரு கருத்து அடங்கியுள்ளது. தேவனுடைய பரிபாலனத்தில் யெஷுஆவின் சரீரமாகிய சபைக்கு தலையாக இருக்கும்படி தேவன் அவரை ஏற்படுத்தினார். 19 நூற் றாண்டுகளுக்கு மேலான காலத்திற்கு முன்பு முடிவடை ந்த தலையானவராகிய யெஷுஆவின் பாடுகள் நிஜ நிறைவேறுதலான ஈசாக்கின் பாடுகளின் முதன்மையான பகுதியாக இருந்தன. சபை வகுப்பாரின் பாடுகள் அதின் இரண்டாம் பகுதியாக இருக்கின்றன. "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக் கிறோம்" என்று அப்போஸ்தலராகிய பவுல் அறிவிக் கிறார் (கலா.4:28).

8. பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு சுவி சேஷ யுகத்தின் முடிவு வரையுள்ள காலத்தில் தேவன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வகுப்பாரை உலகத்தி லிருந்து வெளியே வர அழைத்தார். சபை வகுப்பார் கிறிஸ்துவின் மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகு வதின் மூலம் தங்களுடைய உண்மைத்துவத்தையும், முத லாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவதற்கான தகுதியை யும் நிரூபிக்க வேண்டியதாக இருந்தது. உண்மையான சபையைக் குறித்து பவுல் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: " அவரோடேகூடப் [அவருடைய சரீர அங்கத்தினர்களாக] பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட [அவரு டைய சரீர அங்கத்தினர்களாக] ஆளுகையும் செய் வோம்" (2 தீமோ.2:12). பிதா யெஷுஆவுக்குக் கொடுத்த பாடுகள் மற்றும் அவமானத்தின் பாத்திரம் அவருடைய ராஜ விசுவாசத்தையும், விசுவாச உண்மைத்துவத்தையும் நிரூபிக்கும் ஒரு பரீட்சையாக இருந்தது (மத்.26:39). யெஷுஆ அதே பாத்திரத்தைத் தம்முடைய சீஷர் களுக்குக் கொடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" என்று கூறினார் (மத். 20:22, 23; 26:27). அதாவது, தேவனுக்காகவும், அவருடைய நோக்கத்திற் காகவும் நீங்கள் கொண்டிருக்கிற அன்பையும், உண்மைத் துவத்தையும் மரண பரியந்தமும் நிரூபிப்பதில் என்னு டைய முன்மாதிரியை பின்பற்றுங்கள்.

9. யெஷுஆ தாமே தெளிவாகக் கூறினதைப் போல், அவர் தாமே தம்முடைய ஆடுகளைப் பாது காக்கிறார் (யோவா.10:11-16). பரிசுத்த ஸ்தேவானின் மரணத்திற்காகவும், சபையைத் துன்புறுத்தினதற்காகவும், தர்சு பட்டணத்தின் சவுலைக் கர்த்தராகிய யெஷுஆ கடிந்துகொண்டபோது, "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் ... நீ துன்பப்படுத்துகிற நசரேய னாகிய யெஷுஆ நானே" என்று கூறினார் (அப்.22:7,8). யெஷுஆவைத் துன்புறுத்தும்படிக்கு தர்சு பட்டணத் தானாகிய சவுல் அவரை மாம்சத்திலிருந்தபோது ஒரு போதும் கண்டதில்லை. ஆனால் யெஷுஆவின் சீஷர் களில் மிகவும் சிறியவர்களுக்குச் செய்யப்பட்டது என்ன வாக இருந்தாலும், அது அவருக்கே செய்யப்பட்டதாக இருந்தது. இது இன்றைக்கும் உண்மையாக இருக்கிறது. அவருடைய மில்லினிய யுகத்தின் ஆடுகளின் காரியத் திலும் இது உண்மையாக இருக்கும் (மத். 25:31-46). அதற்கிடையில் கர்த்தருடைய சிறியவர்களுக்குத் தீங்கு செய்கிறவனும், அவர்களில் மிகவும் சிறியவர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக் கிறவனும் (மத்.10:42) மகிமையின் கர்த்தருக்கே அதைச் செய்கிறான்.

புதரில் சிக்கிக்கொண்டிருந்த ஆடு

10. ஆபிரகாம் தன்னுடைய குமாரரின் ஜீவனைப் பலி செய்வதைத் தேவதூதரின் மூலம் தேவன் தடுத்த பிறகு, புதரில் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆடு ஈசாக்குக்குப் பதிலாகப் பலி செய்யப்பட்டது. இவ்வா றாகப் பலி செய்யப்படுகிற ஆடு என்பது, ஆபிரகாமின் வித்தின் மனுஷீகத்திற்கு ஒரு அடையாளமாக ஆயிற்று. மேலும் பூமியின் சகல ஜாதிகளும் மேசியாவின் ராஜ்யத் தில் ஆசீர்வதிக்கப்படுவதைத் தேவ நீதி அனுமதிப்பதற்கு, அவர்களுக்காகத் தேவ நீதி ஒப்புரவாக்கப்படும் செயல் முறையின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டும் ஒரு உருவக மாகவும் இது ஆயிற்று.

11. அதற்குப் பிறகு தேவனுக்கு இஸ்ரயேலர் களோடு இருந்த எல்லா செயல்பாடுகளிலும் இதே கருத்து காக்கப்பட்டதை நாம் நினைவுகூர வேண்டும். இவ்வாறாக எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப் பட்டு, அதின் ரத்தம் இஸ்ரயேலர்களின் வீடுகளின் வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத் திலும் தெளிக்கப்பட்டது. மிகவும் முக்கியமான அந்த இரவிலே இஸ்ரயேலர்கள் அந்த வீட்டில் தங்கியிருந் ததால், சங்கார தூதன் எகிப்தின் முதற்பிறப்புகள் அனைவரையும் அழித்தபோது இஸ்ரயேலர்களின் முதற் பிறப்புகள் காக்கப்பட்டார்கள் (யாத். 12). இது அடை யாளமாகப் பின்வரும் உண்மையைச் சித்தரித்தது: "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டியாகிய" (யோவா.1:29,36) அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவரின் பலி புண்ணியம் முதற்பேறானவர் களுக்காக, அவர்களுடைய கணக்கில் எழுதப்படா விட்டால், சுவிசேஷ யுகத்தில் அவர்கள் அழிவிலிருந்து ரட்சிக்கப்பட முடியாது என்ற உண்மையை இது அடை யாளமாக முன் குறித்திருந்தது. அது போலவே, இஸ்ரயேலர்களுக்கும், அவர்கள் மூலமாக மற்ற ஜனங் களுக்கும், கோத்திரங்களுக்கும், பாஷைக்காரருக்கும், ஜாதிகளுக்கும் ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்பு மீட்பின் வேலை செய்யப்படுவது அவசியமானதாகும் என்று இஸ்ரயேலர்களின் பாவ நிவாரண பலிகளும், தகன பலிகளும் காண்பித்தன.

12. ஆபிரகாமின் விசுவாச பரீட்சையிலிருந்து கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய பல பாடங்களில் சில பாடங்கள் இவ்வாறாக இருக்கின்றன:

13.i) எவரின் மூலமாக முழு மனுகுலத்திற்கும் இறுதியாக ஆசீர்வாதங்கள் வருமோ, அவருடைய மரணம் அவசியமானது. யெஷுஆ நம்முடைய பாவங்களுக்காக மரித்திராவிட்டால், பாவ மன்னிப்பு உண்டாயிருக்காது (எபி.9:12-14,22). ஆகையால் மரித்தோரின் உயிர்த்தெழுத லும் உண்டாயிருக்காது. அப்படி இருக்கும்போது, மரணம் என்பது நித்திரையாக இராமல், அழிவாக இருந்திருக்கும்.

14.ii) கர்த்தராகிய யெஷுஆ செய்த ஒப்பந்தத்தில் தம்முடைய பங்கை அவர் விசுவாச உண்மைத்துவத்துடன் நிறைவேற்றி தம்முடைய ஜீவனைப் பலிசெய்யாதிருந் தால், அதின் முழு நிறைவிலும், தெய்வீகத் தன்மைக்கு உயர்த்தப்படுவதிலும் பங்குபெற்றிருக்க முடியாது என் பதைக் குறித்தும் உறுதியாக இருப்போமாக. அவர் மரணபரியந்தமும், "சிலுவையின் மரணபரியந்தமும்" விசு

வாச உண்மைத்துவமுள்ளவராக இருந்ததால், "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார் (பிலி.2:8,9)

15.iii) கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்த எல்லா ஜனங்களுக்கும் இதே விதி பொருந்தும் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். நாம் நம்முடைய ஜீவனைப் பிரதிஷ்டை செய்வது மட்டுமே போதாது. எஜமானரின் ஊழியத்தில் நம்முடைய ஜீவனை மரணபரியந்தமும் விசுவாச உண்மைத்துவத்துடன் பலிசெய்வதின் மூலம் நம்முடைய ராஜ விசுவாசத்தையும், விசுவாச உண்மைத்துவத்தையும் நாம் நிரூபிக்க வேண்டும். "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்." "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத். 10:39; 16:24). "ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்" என்று அனுதினமும் ஆர்வத்துடன் ஜெபிப்போமாக (லூக்.17:5). "என்னதான் நேரிடினும் விசுவாசம் தேவனை உறுதியாக நம்பக் கூடும்!" என்று அறிந்தவர்களாக, நமக்குரிய சகலத்தையும் அவருடைய பரிபாலனத்திற்கு ஒப்புக்கொடுத்து, நமக்குத் தேவன் கொடுக்கிற கட்டளைகளைப் பின்பற்ற நாம் செய்யும் முயற்சிகளில் விசுவாச உண்மைத்துவமுள்ள ஆபிரகாமின் அதிசயமான முன்மாதிரியைப் பின்பற்ற நாடுவோமாக!

****

ஸ்விஸ் நாட்டுப் பயண வழிகாட்டி கற்பித்த பாடம்

R572

சாரா ஸ்மைலி *(Sarah Smiley)* என்பவர் ஆல்ப்ஸ் *(Alps)* மலைத்தொடரில் செய்த சுற்றுலாப் பயணத்தைக் குறித்து எழுதிய விவரத்தில் உள்ளத்தை உருக்கும் ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகிறாள். நம்முடைய பாரங்களை சுமக்கிற உன்னதர் நமக்கு அளிக்கிற ஏராளமான உதவியைப் பற்றிய வேதாகம போதனையை இது மிக அழகாகச் சித்தரிக்கிறது. அவள் இவ்வாறு எழுதுகிறாள்: "1879-ஆம் ஆண்டு கோடை காலத்தில் நான் ஆல்ப்ஸ் மலைத்தொடரிலுள்ள ரிகி *(Rhigi)* என்ற மலையிலிருந்து இறங்கி வந்தேன். மிகவும் உண்மைத்துவமுள்ள வயது முதிர்ந்த ஒரு பயண வழிகாட்டி என்னோடு இருந்தார். அன்று அவர் எனக்குச் செய்த உதவிக்குக் கூடுதலாக, அவர் அறியாமலேயே, என் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு பாடத்தையும் கற்பித்தார். பயணம் துவங்கும் போதே என் போர்வைகளையும், மற்ற சுமைகளையும் தன் தோளின் மேல் கவனமாக வைத்துக்கொண்டார். அவ்வாறு செய்யும்போது என்னிடமுள்ள எல்லாவற்றையும் அவர் மேல் வைக்க என்னிடம் கோரினார். ஆனால் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய சில பொருட்களை நான் என்னிடமே வைத்துக்கொள்ள விரும்பினேன். ஆனால் நான் தடையின்றி நடப்பதற்கு அது இடையூராக இருப்பதை விரைவாகக் கண்டுகொண்டேன். இருந்தாலும் அவைகளை என் வழிகாட்டிக்குக் கொடுக்க மனமில்லாதிருந்தேன். நான் சற்று ஓய்வெடுத்துக்கொள்ள உட்காரும்போது, அவர் என்னிடம் திரும்ப வந்து, என் தடியைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அவருக்குக்



கொடுக்க என்னிடம் கனிவாகவும், அதே நேரத்தில் கண்டிப்பாகவும் கோரினார். அப்பொழுதுதான் நான் அவைகளை அவருக்குக் கொடுத்தேன். அவர் மிகவும் கவனத்துடன் அவைகளைத் தன் தோளின் மேல் சுமந்து, மன நிறைவுடன் என்னைப் பார்த்து, எனக்கு வழிகாட்டினார். இப்பொழுது எவ்வித தடையும் இல்லாமல், இரெட்டிப்பான வேகத்துடனும், இரெட்டிப்பான பாதுகாப்புடனும் என்னால் நடக்க முடிந்தது. அப்பொழுது என் உள்ளத்தில் ஒரு குரல் இவ்வாறு சொன்னது: "ஆ, புத்தியில்லாத, விருப்பத்துணிவுள்ள இருதயமே, உன் கடைசி சுமையையும் நீ அவரிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? நீ உண்மையிலேயே அவைகளைச் சுமக்க எந்த அவசியமும் இல்லையே!" உடனே அதைப் புரிந்துகொண்டேன். அதற்குப் பிறகு அந்த செங்குத்தான மலைச்சரிவிலுள்ள ஒரு பாறையிலிருந்து மற்றொன்றுக்கு இலேசாகத் தாவிக்கொண்டு, எனக்குள்ளே இவ்வாறு சொல்லிக்கொண்டேன்: "என் சுமை சுமப்பவரும், என் வழிகாட்டியுமாகிய யெஷுவாவையும் நான் அவ்வாறே பின்பற்றுவேன். அவர் என்னை விசாரிக்கிறவரானபடியால், என் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுவேன்."

****

உங்கள் கவனத்திற்கு

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

புது உடன்படிக்கை

Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement
Website: www.mbtm.in